
www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் - 19

Chanchive 19-Udgave



...OMBES ... 92600 ASNIERES-SUR-SEINE FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர் - 19
ஏப்ரல் - மே / 1992



**அட்டைப்படம்**
மடியில் இளையவன், பெட்டியில் மூத்தவன், கண்ணைத் திறக்கையுடன் அவள். ஈழத்தைநோக்க இந்தியக்கப்பல் வரும். சிரிப்பிழந்த இவர்களைப்பற்றி யார் கவலை கொள்கிறார்.


| பக்கம் | உள்ளடக்கம் |
|---|---|
| 3 | நோக்கு |
| 8 | கவிதை செல்வன் |
| 10 | கற்பனையில் ஈழ........ |
| 15 | கவிதை சாந்திமனோ |
| 16 | தொப்பி வேப்பெண்ணை |
| 17 | கட்டுரை |
| 20 | சுதந்திரத்திற்கான ஒரு வெளிப்படையானவிவாதம் |
| 23 | சருனி தீக்சித் |
| 24 | கடிதங்கள் |
| 28 | பக்கத்துவீடு தொடர்கதை |
| 31 | மனிதஉரிமைகளுக்கான யாழ் பலகலைக்கழக ஆசிரியர்களின் 8வது அறிக்கையிலிருந்து |
| 35 | சிறுகதை தர்ஷன் |
| 43 | சிறுகதை சத்தியன் |


சஞ்சீவியின் தொடர்புகளுக்கு Chanchive PostBox-1205 7500-Holstebro.D.K

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

## தொண்டமான் + ஆலோசனை=தீர்வு

அமைச்சர் தொண்டமானால் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கென பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய பரபரப்புகளும், கலவரங்களும் இன்றல்ல நேற்றல்ல பண்டா-செல்வா ஒப்பந்தம் முதல் தொண்டமான் ஆலோசனை வரை தமிழ் மக்கள் கண்டு கொண்டிருக்கின்றனர். அப்படியென்ன விசேடமாக திரு தொண்டமானின் மூளையில் உதயமானது! அவர் மூலமாக முன்வைக்கப்பட்டது?

இதுவரை காலமும் வெளிவந்த கருத்துக்கள், ஒப்பந்தங்கள் என்பனவற்றைவிட ஒருபடி மேலேபோய் புலிகளையும், தமிழ் மக்களையும் திருப்திப்படுத்தக் கூடிய சில விடையங்களை அவரது ஆலோசனைகள் முன்வைக்கின்றது. குறிப்பாக வடக்கு – கிழக்கு இணைப்பு, குடியேற்றம், இராணுவ போலீஸ் படை மற்றும் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு என்பன இவற்றில் அடங்கும்.

இவ்வாறு திரு தொண்டமான் தமிழ்மக்களின் அபிலாசைகளை தீர்க்கும் ஒரு ஆலோசனையை இப்போது முன்வைக்கின்றார் என்றால் இதற்குமுன்பு இந்திய–இலங்கை ஒப்பந்தம், அதன் பின்பு இலங்கை அரசு–புலிகளின் பேச்சுவார்த்தை ஒருவருடங்களுக்குமேலாக நடந்ததும், இன்றுவரை இருதரப்பினரும் பேசிய விடையங்களை வெளிவிடாமல் உள்ள நிலையில் திரு தொண்டமான் புலிகளுடன் பேசப் போவதாக பத்திரிகைச் செய்திகள் யாழ் பத்திரிகைகள் உட்பட செய்தி வெளியிட்டுள்ளது (கவனிக்கவும் யாழ்-பத்திரிகைகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளவை.).ஆயுதப்படையினர் யுத்தங்களில் முன்னணி யில நிற்பதும்,புலிகள் பின்வாங்கியுள்ள நிலையில் இப்பேச்சுவார்த்தை சாத்தியப்படும் பட்சத்தில், ஒரு யுத்தநிறுத்தம் தமிழ் மக்களுக்கு வெந்த புண்ணை ஆற்றுவதற்கு ஒரு தற்காலிக காலஇடைவெளியையும் அரசும்,புலிகளும் தம்மைத்தயார்ப்படுத்திக்கொள்ளவும் உதவும் எனபதில் சந்தேகம் இல்லை.

வடபகுதிநிலமை இவ்வாறு இருக்க திரு.தொண்டமானின் இக்கருத்துகள் யு.என்.பி கட்சி உட்பட எதிர்க்கட்சிகள்வரை தமிழர்கள் நாட்டைப் பிளவு படுத்த உதவும் ஆலோசனை என்ற ஒரு முணுமுணுப்பும் தொடங்கியுள்ளது.இதேசமயம் இவ்வாலோசனைகள் தென்பகுதியில் சற்று உறங்கிக்கிடந்த சிங்கள பௌத்த பேரினவாத அலையை மீண்டும் கிளப்பியுள்ளது.தற்போது மேற்குலக நாடுகளில் புதிய நாஜிகள் கிட்லரின் வரலாற்றை திரித்து கிடலர் வெள்ளை நிறமக்களின் தேவதூதன் என்பதுபோல் சிங்களத்தேசியவாதத்தின் இன்னொரு தீவிரவாதியும், பிரச்சாரகருமான கலாநிதி நளின்.டி சில்வா(கொழும்புப்பல்கலைக்கழக கணிதத்துறை விரிவுரையாளர்) "திவயின" நாளேட்டில் சிலமாதங்களுக்குமுன்(டிசம்பர் 25-27)இருகட்டங்களாக வெளியிட்டகட்டுரையில் சிங்களஇனவாதத்திற்கு தீனிபோடக்கூடியவகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளதும் இங்கு கவனிக கப்படவேண்டும்.

புலிகள் மட்டுமல்ல ஏனைய தமிழ்இயக்கங்களும் இலங்கைச்சரித்திரத்தில் இரண்டுஇனங்கள் இருந்ததாக நம்புகின்றன.இந்தவிடையம் பொய்யானது எனவும், இலங்கையில் ஆயிரமாயிரம் வருடங்களாக இருஇனங்கள் இருந்ததில்லை,சிங்களவர் மட்டுமே தொடர்ச்சியாக வாழ்ந்துவந்ததாகவும் சிங்களவர்களுக்குமட்டுமே தொடர்ச்சியான கலாச்சாரபாரம்பரியம் உண்டு எனவும் சோல்புறு-கமரோன் ஆணைக்குழு(ஆங்கி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லேய அரசு தொடர்பாக நியமித்தது)தமிழர் என்ற இனக்குழு(Ethnic group)ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட ஒன்றே என்பதற்கு சான்றுபகர்கிறது, எனவும், இன்றும் உண்மைக்கும், வரலாற்றுக்கும் புறம்பான பல குதர்க்கங்களுடன் இத்தகைய நபர்கள் ஈடுபடுகின்றனர்.இதுமட்டுமல்ல முன்னைநாள் அமைச்சர் காமினி ஜயசூரியா தலைமையிலான சிங்களஇனப் பாதுகாப்பு பேரணி.எண்பதுகளின் பிற்பகுதியில் பிரபலமடைந்த "ஜாதிகசிந்தனய" எனும் சிங்களஇனவாதக்கோட்பாட்டின் பிதாமகரான குணதாச அமரசேகரா போன்றவர்கள் தமிழ்மக்களிற்கு இன்னாட்டில் பிரச்சினையே இல்லை தமிழ்ஏகாதிபத்தியத்தின் படையெடுப்பே இதுவென துரோகத்தனமாக சிங்களப்பேரினவாதத்தின் எரியும்நெருப்பில் எண்ணை ஊற்றுகின்ற பேச்சுக்கள் நடக்கின்ற இவ்வேளை திரு தொண்டமானின் இந்தஆலோசனைகள் எந்தஅளவிற்கு நடைமுறைச்சாத்தியம் என்பது எல்லோராலும் விளங்கிக்கொள்ளக்கூடியதே.

திரு தொணடமானின் இந்தத்திடீர்க்கரிசனைக்குப்பின்னால் உள்ள அரசியல்விளையாட்டுத்தான் என்ன என்பதில் நாமும் சந்தேகப்படாமல் இருக்க முடியாது உள்ளது.எனவே இவரது கடந்தகால அரசியல் என்ன என்பதை ஒருதரம் பார்ப்போமானால் சிலவிடையமாவது தெளிவாகலாம்..அதற்குமுன்பு ஜனாதிபதியும் அமைச்சர்களும் இதுதொடர்பாக தொடர்ந்து மௌனம் சாதிப்பது ஏன் என்பதும் பெரும் சந்தேகத்தைக்கிளப்பியுள்ளது.

இனி தொண்டமானின் கடந்தகாலம் பற்றிசிறிது பார்ப்போம். தொண்டமானுடைய இலங்கைத்தொழிலாளர் காங்கிரசின் அரசியல்வரலாற்றை ஆராயும் போது பல்வேறுகாலங்களில் சிங்களப்பேரினவாதத்திற்கு பாதுகாப்பாக இருந்துள்ளார்.

உதாரணமாக சாஸ்திரி ஒப்பந்தம் அமுலாக்கல் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் நியமனஅங்கத்துவம் பெற்றிருந்த இ.தொ.கா. பிரதிநிதிகள் அச்சட்டத்தை ஆதரித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

து வாக்களித்ததன் மூலம் இ.தொ.காங்கிரசை உடலுழைப்பாலும்,சந்தாப்பணத்தாலும்,அரசியல்ஆதரவாலும் வாழவைத்துக்கொண்டிருந்த மலையகதமிழ்மக்களில் 6 லட்சம் பேரை நாடுகடத்துவதற்கு ஆதரவளித்ததன் மூலம் பேரினவாதிகளுக்கு ஒத்துழைத்தது.கவனிக்க தமிழ்இயக்கங்களில் ஈழம்பிரிவினரின்வரைபடம் (எல்லை)நடுவில் தனியாகஇருக்கும்பகுதி மலையகமக்கள் என்னும் பதத்திற்கான குறியீடு. இவர்களும் தற்போது சிறீலங்காப்பாராளுமன்றத்தில் தமிழ்இனத்தின்பேரில் இருப்பது இங்கு கவனிக்கப்படவேண்டும்.சிங்கள பௌத்தபேரினவாதத்திற்கு ஆதரவாக இருப்பதும், பாராளுமன்ற தீர்மானவாக்கெடுப்புக்களில் இவர்கள் கைகள் ஆதரவாக உயர்வதும் இவர்களின் துரோகத்தனத்தின் சாட்சியங்கள்.

இலங்கை இனவாதப்பிரச்சினையை அரசியல் ரீதியாக தீர்ப்பதற்காக வாக்குறுதியளித்து1977ல் பதவிக்குவந்த ஐக்கியதேசியக்கட்சி(u.n.p).அரசுபேரினவாத ஆதிக்கத்தை இராணுவ வழிமுறைகளின்மூலமாக நிலைநாட்டுவதை நோக்கமாகக்கொண்டு 1979ம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததன் மூலமாக தமிழீழ ஒழிப்பின்மூலம் பேரினவாதஆதிக்கத்தை நிலைநாட்ட இவ்வரசுக்கு ஆதரவாக இருந்துள்ளார்.

தமிழ்மக்களின் சுயநிர்ணயஉரிமையை நிராகரிக்கின்றதும்,தமிழர்விடுதலைக்கூட்டணிஉறுப்பினர்களை பாராளுமன்றம்வரவிடாமல்(த.வி.கூவின் அரசியலில் எமக்குஉடன்பாடுஇல்லாதபோதும்அன்றயகாலகட்டத்தில் தமிழர்களின் வாக்கெடுப்பு மூலம் வந்தவர்கள் என்பது மறுக்கமுடியாது)செய்வதுமான இலங்கைஅரசின் அரசியல்யாப்பின் ஆறாவது திருத்தச்சட்டத்திற்குஆதரவாக வாக்களித்தமையையும் குறிப்பிடலாம்.

மேற்கூறியதுபோல் தமிழ்மக்களினதும் மலையகமக்களினதும் அபிலாசைகளுக்கு எதிராகசெயற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டதன்மூலம், 77கலவரத்தின்பின்பு தனதுசொத்துக்களை தமிழ்நாட்டுக்கு மாற்றிக்கொண்டு ஓய்வெடுத்தமையும் இடைக்காலத்தில் "செல்லச்சாமி" சாவேர இவர்போல சிங்கள பேரினவாதிகளுக்கு சேவை செய்யாதமையினால் மீண்டும் இலங்கை திரும்பி தனதுபணியை தொடர்ந்துள்ளார் என்பதும் தெரிந்த விடையமே.

இவ்வாறுகூறுவதன்மூலம் நாம் குறைகூறும் வகுப்பினரென சில அரசியல்வித்தகர்கள் வதந்திகளை உருவாக்கலாம். அரசியல் என்பது கடந்தகால நடைமுறைகள் எவ்வாறு இருந்தன என்பதை ஆராய்வதில் ஒருபகுதியாகுமென்பதை இவாகளும் மறுக்கமுடியாது.

இந்தநடவடிக்கை தொண்டமானின் அரசியல் வாழ்விற்கும்,மலையகப்பகுதி இளைஞர்கள் தீவிரவாதிகள் என்றபெயரில் கைதுசெய்யப்படுவதை பொதுமக்களிடமிருந்து மறைக்கவும்,வடக்கு_கிழக்கு பகுதிகளில் அரசு-அரச கைக்கூலிக்குழுக்கள்,புலிகளினால் நடாத்தப்படும் அடாவடித்தனங்களை மறைக்கஉதவும் என்பது உண்மையே.

இது ஒருபுறமிருக்க உருப்படியாக அரசு ஏதாவது செய்யவேண்டும் என்றுவிரும்பினால்,உடனடியாக செய்யவேண்டியது, யுத்தநிறுத்தம்.இதுவெந்தபுண்ணை ஆற்ற தமிழ்மக்களுக்கு உடனடியாக உதவும்.

அடுத்து தமிழ்மக்களின உாிமைகளை வழங்கவேண்டியதேவைகளை ,அவசியத்தை வலியுறுத்தும் பொதுசனஅபிப்பிராயத்தை உருவாக்கவேண்டும். இதன்பிறகுதான் எந்தத்தீர்வும் சாத்தியமாகும்.இல்லாவிட்டால் தொண்டமான்முதல் கனேடிய- ஐரோப்பியதூதுக்குழுவினர் எதைச்சொன்னாலும் ஜனாதிபதி பிரேமதாசா தலைகீழாகநின்றாலும் இறுதியில் தீர்மானிப்பது சிங்களபெளத்த பேரினவாதமே.

– ஏஜீவி.

www.tamilarangam.net

# அன்பான சினேகிதிக்கு

நிஜத்தை
நான் தொலைத்து
நீண்ட நாட்கள் ஆகின்றது
அந்த
நினைவுகள் மட்டுமே
இப்போது
நிழலாடிக்கொண்டிருக்கிறது.

உறக்கம்
விழிகளைத் தேடிவந்த
காலம் எல்லாம் போய்விட்டது.
இப்போது
உறக்கம் சென்ற பாதையில்
விழிகள் அலையும்
நாட்களே நடந்துகொண்டிருக்கின்றது.

இதற்கெல்லாம்
என்ன காரணம்?
புரிந்தும் புரியாது இருக்கும்
அந்தக் காரணங்களை
உச்சரிக்க
எத்தனித்த உதடுகள் கூட
எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

[illegible]

www.tamilarangam.net

நான்
கவிதை எழுதுவதனை
நிறுத்திவிட்டதற்காய்
கவலைப்பட்டு இருந்தாய்
உனது
கடைசிக் கடிதத்தில்.

கடந்தகாலங்களுடன்
இறுக
கட்டப்பட்டிருப்பவன்
எவ்வாறு சிநேகிதி,
கவிதைக் குதிரையில்
சுதந்திரமாக
சுற்றுலா வரமுடியும்?

மேலும்
கற்பனை செய்தல்
கனவினில் வாழ்தல்
கவிதைகள் வரைதல்
இவற்றைத் தவிர
வேறு எதனைச் செய்திருக்கிறோம்
கடந்தகாலங்களில்.

மக்கள் மத்தியில்
விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்
கனவுகளிலேயே
எத்தனை இரவுகள்
நாம் கண் விழித்திருக்கின்றோம்?

விடியலுக்கு
பாதை சமைக்கும்
கற்பனைகளில்
எவ்வளவு தூரங்கள்
நாம் கால் நடந்திருக்கிறோம்?

(தொடர்ச்சி 42ம் பக்கம் பார்க்க)

எகுட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கற்பனையில் ஈழக்குடியரசு

இலையுதிர் காலமாய்

— குமரன்

அதிகாலைவேளை ஜனாதிபதி மாளிகைக்குள் ஒரே பரபரப்புநிலை. அகன்ற அந்த வீதியின் நடமாட்டம் வழமைக்குமாறாக அதிகரித்திருந்தது உல்லாசத்துறையினர் வரத்துகளும் வழக்கமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஐரோப்பிய நிருபர்கள் வழமைக்கு மாறாக கொஞ்சம் அதிகமாகவே காணப்பட்டனர். ஈழக் குடியரசின் பத்திரிகை நிருபர்களும் வெள்ளை வண்ணத்துப் பூச்சிகள்போல் ஜனாதிபதி மாளிகைக்குள் மிக அவசரமாக வந்து கொண்டிருந்தனர்.

ஈழப்போராட்ட காலத்தில் நன்கு பயிற்சி பெற்ற திறமையான காவற்படை வீரர்கள் துப்பாக்கி, வாட்களையேந்தியவண்ணம் மிகமிடுக்குடன் மாளிகை வாயிற்காவல் புரிந்துகொண்டிருந்தனர். அவர்களைக்காண ம்தோறும் நெஞ்சிலே ஒருவித பயம் கொள்ளும்படியாக அவர்கள் தோற்றம் இருந்தது.

" " " " "

கிரிக்கட் பிட்ச்மாதிரி நீண்டதொரு பெரியமேசையில் விதவிதமான சுயதேசிய உணவுவகைகளும், குளிர்பானம், தீம்பண்ட பழவகைகளும், மலர்ச் செண்டுகள், வேறு அலங்காரப் பொருட்கள் அலங்காரிக்கப்பட்டு மேசைக்கு முழுமையைக் கொடுத்தன.

தொடர்ச்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேசையைச் சுற்றிலும் அலங்காரக் கதிரைகளில் அரச உயர்மட்டஅதிகாரிகள், விசேடவெளிநாட்டு நிருபர்கள், உண்ணாட்டுநிருபர்கள் புடைசூழ நடுநாயகமாக நமது ஜனாதிபதியவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

மகா மேன்மைதங்கியஜனாதிபதியவர்களும்,அரச உயர் அதிகாரிகளும் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்,காரணம் ,வெளிநாட்டுநிருபர்கள், நம்நட்டைமேலைத்தேய நாடுகள் பெரிதும் விரும்புகின்றன,என்ற கருத்துப்பட உண்ணாட்டுப்பத்திரிகைகளுக்குக் கொடுத்தசிறந்த பேட்டிதான்.

தமிழர்கள் தமக்கென ஒருகுடியரசை நிறுவி ஐந்தாண்டுகளின்பின் ஐரோப்பியநிருபர்கள் அரசஅழைப்பையேற்று வந்திருந்தார்கள். அரசஅதிகாரிகள் ஒழுங்குசெய்தபடியேஇன்றுகாலைப்போசனத்துடன்விசேடபேட்டி ஆரம்பமானது.

வழமையான சம்பிரதாயங்களுடன் பேட்டி ஆரம்பமாகியது.பிரபல்யமான ஆங்கிலப்பத்திரிகையொன்றின் நிருபர் பேட்டியை ஆரம்பித்துவைத்தார். அவர் முதலில் சாதாரண பல கேள்விகளைக்கேட்டு மிக நாசூக்காக முக்கியகேள்விக்குத்தாவினார். ஜனாதிபதியவர்களே பதிலளித்துக்கொண்டிருந்தார்.

நிரு.1.விமானநிலையத்தில் வெளிநாட்டவர்களை ஒருவிதமாகவும்,உண்ணாட்டவர்களை வேறுவிதமாகவும் சோதனைசெய்வதைப்பார்த்தோம்.அதுமட்டுமல்ல, கடவுச்சீட்டுக்களை ஒரு குறிப்பிட்ட இடத்திற்குக்கொண்டுசென்று ஒரு சில நிமிடத்திறகுள் கொண்டுவந்து ஒப்படைத்தார்கள். இதுபற்றி விளக்கம் கூறமுடியுமா?

ஜனா. வெளிநாட்டவர்களின் கடவுச்சீட்டுக்களில் விசாமுத்திரைகள் பாரிசீலனை செய்யப்படும்.உண்ணாட்டவர்களது கடவுச்சீட்டுகள் அவர்களதுதானாவென்று பாரிசீலிக்கப்படும்.

நிரு.2. இங்கு பல உல்லாசப்பிரயாணிகளும் வர்த்தகர்களும் வேறு பலருமாக பெருந்தொகையானோர் அடிக்கடி வருகி

எ ஞ்சீ ளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

றார்கள்..அத்தனை கடவுச் சீட்டுகளையும் ஒருசிலநிமிடத்தில் எப்படிப் பார்க்கமுடிகிறது?

ஜனா. அதற்கு காரணமிருக்கிறது..அது எப்படியெனில் எமது நாட்டில் பல கைதேர்ந்த அனுபவசாலிகள் இருக்கின்றார்கள். எமதுநாட்டில் இனப்பிரச்சினையால் அல்லோலக-ல்லோலப்பட்ட நேரம்.ஆயிரக்கணக்கானமக்கள் செத்துமடிந்தவேளை, இதையே சாக்காகவைத்து பல லட்சக் கணக் கானபோர் வெளிநாடுகளுக்கு ஓடின-ார்கள்..அவர்களுக்கு பல ஏஜென்சிகள் உதவினார்கள். அந்த ஏஜென்சிநடத்தியவர்களுக்கு உலகநாட்டு விசா முத்திரைகளும் தண்ணிபட்டபாடு.அவர்கள் பார்த்தவுடனேயே,கடவுச்சீட்டு,விசாவின் குளறுபடிகள் , உண்மை-மநிலமைபற்றித் தெரிந்துவி-டுவார்கள்.

நிரு.3. விமானநிலையப் பாதுகாப்பு அதிகாரிகள், இதர உத்தியோகத்தர்கள் யாவரும் கண்ணுக்குள் எண்ணை விட்டபடி மிக அவதானமாக இருந்தார்களே..அசலான அதிகாரிகளாக தெரிவுசெய்தீர்கள் ?

ஜனா. நான் உங்களுக்கு முதலில்ஒன்றைச்சொல்லிவைக்கவேண்டும்.தற்போதய அதிகாரிகளில் 100க்கு 99வீத அதிகாரிகள் ஈழவிடுதலைப் போராட்டகாலத்தில் எந்தெந்தத்துறைகளில் அசகாயசூரர்களாக இருந்தார்களோ அவர்கள் திறமைக்கேற்றபடி பதவி வகிக்ன்றார்கள்.இப்போ, நீங்கள்கேட்டகேள்விக்குபதில் தருகின்றேன்..அன்றைய ஒரு போராட்ட இயக்கம் விமானத்திற் கு ம், அன்றைய.அரசின்முக்கியஉடமைகளுக்கும்குண்டுவைத்துஒருசாதனையைஏற்படுத்தியது.மேற்படி திறமைசாலிகளையே அந்தந்த அதிகாரிகளாகப் பயன்படுத்தியிருக்கின்றோம். அவர்களை-ள எழிதில் மற்றவர்கள் ஏமாற்றமுடியாது.

நிரு.1..அப்படியானால் மற்ற அதிகாரிகள்?..........

ஜனா. (உ-ம்)வங்கியில் திறமையான முறையில் கொள்ளையடித்தவர்களை

www.tamilarangam.net

வங்கிப் பாதுகாவல் அதிகாரிகளாகவும்,வீதியைக்குண்டுவைத்துத்தகர்ந்தவர்களை வீதிப்பாதுகாப்பாளர்களாகவும்,பொலீஸ் நிலையங்களைத்தாக்கியவர்களை பொலீஸ் அதிகாரிகளாகவும்,முக்கியபெரும்புள்ளிகளைக் கடத்தியவர்களை அரச உயரதிகாரிகளின் மெய்ப்பாதுகாப்பாளர்களாகவும்,வெளிநாட்டு உண்ணாட்டு எதிர்ப்பு சக்திகளுடன் சேர்ந்து திட்டங்கள்போட்டவர்களை இராணுவ,போலீஸ், உயர் மட்ட அதிகாரிகளைக்கண் காணிக்கும் உளவாளிகளாகவும் நியமித்திருக்கின்றோம்

நிரு(எல்லோரும்).(தலையசைத்தபடி)இப்போ எமக்குப்புரிகிறது.(பின் ஒருவரையொருவர் பார்க்கின்றனர்)மகா மேன்மைதங்கிய ஜனாதிபதியவர்கள் எப்படித் __ தெரிவானார்கள் என்பதைச் சொல்லமுடியுமா?

ஜனா. அது...அது...அதுவந்து (சுற்றும் முற்றும் பார்க்கிறார்)

நிரு.1. சொல்லமுடியாவிட்டால் சொல்லவேண்டாம்

ஜனா. அப்படியொன்றுமில்லை.நான் முன்பு அரசியற்கட்சிகளைப்பிரிப்பதில் கைதேர்ந்தவனாக இருந்தேன் அப்படிப்பட்டவன் தான் குழப்பமின்றி அரசியலைக் கொண்டுநடாத்த முடியுமென்று மற்றயசகாக்கள் முடிவுசெய்தபடியால் நான் ஜனாதிபதியானேன்

நிரு.2. இறுதியாக ஒருகேள்வி.உங்கள்நாடு சோஷலிசநாடா?முதலாளித்துவ நாடா?

ஜனா. எங்கள் நாடு எங்களுடையதே.இங்கு எல்லா மக்களுக்கும் சமஉரிமையுண்டு. முதலாளித்துவ சோஷலிசவாதங்கள்........ ஏதோ ஒரு வல்லரசுடன் சம்பந்தப்படுத்திவிடும்..அதனால் நாம் அவற்றைப் பிரயோகிப் பதில்லை. நிருபர்கள்: ,மிக்க நன்றி, அப்படியானால் ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையில் இழுபறிகள் ஏற்படுவெதில்லையா?...........................

□□□□□□□□□□□□□□□

www.tamilarangam.net

டே... ராசன் டெனிஸ் புலி,அலாமடிச்சு எவ்வளவு நேரமாச்சு இண்டைக்கு பள்ளிக்கூடம் இல்லையே, அப்படியெண்டால் ஏன்ரா என்ரநித்திரையையும்குழப் பினனி.

வரதண்ணை மன்னிச்சுக்கொள்ளுங்கோ நேரம் போனதேதெரியேல்லை . நான் எங்கடைநாட்டைப்பற்றி கனவுகண்டுகொண்டு கிடந்திட்டன்.நல்லகனவு.

போடாபோயா,அங்கையெல்லாம் சரிவந்திட்டு தாம். அதாலை எங்களை அனுப்பிப் போடுவினமோ எண்டு நான் பயந்து சாகிறன். நீ என்னடாவெண்டால் கனவு கண்டுகொண்டிருக்கிறாய்.

ஏனண்ணை அங்க சனங்கள் சாக நீங்கள் இங்கை உல்லும் , ஒல்போவும் ,அடிச்சுக் கொண்டிருந்தால் காணுமே?

அங்கை இதெல்லாம் கிடைக்குமே?

உதிலை என்ன கிடக்கு?
அது உனக்கு விளங்காது..அப்பிடியெண்டால் கிளாசாலை வா,ஒரு டோஸ் தாறன் இண்டைக்காச்சும் ரேஸ்றபண்ணிப்பார்.
பட்டுப் பழுத்த அறிவாளி விளங்கிக் கொண்டவை ஏராளம்.எனக்கு விளங்கப்படுத்தவாறார்.

என்ன பேசாமல் நிக்கிறாய் சம்மதமா?
சும்மாயிரண்ணை. உங்கடவிளக்கங்கள் இப்ப எனக்கு வேண்டாம்.நான் ஸ்கூலுக்குப்போயிற்று வாறன்.

அவரும் அவற்றைரெக்னிக்ஸ்கூலும்........

எல்லாம் விளங்கினது போல ஒன்றுமே விளங்காததுகள் இன்னும் எத்தனையோ..அவர்களுக்கு தாங்களைச்சுற்றியேவட்டம்போடத்தெரியும். உலகம் அவர்களுக்கு அதுதான்.

"நெஞ்சிலுரமுமின்றி நேர்மைத்திறனுமின்றி"

பாரதியார் பாடலை முணுமுணுத்தபடி ராசன் போகிறான்.

எ.தேசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உயிருக்கு ஒரு மடல்

கண்ணிரண்டும் கங்கையாகிப்போவதென்ன_அதில்
கவலைகள் ஓடம்விட்டுப்போவதென்ன.
நெஞ்சத்தில் உன் நினைவலைகள் அடிப்பதென்ன_அவை
நிழல்தேடி உன் மடிதேடி அலைவதென்ன.

நித்திரையில் வந்து என்னைத்தொட்டுவிட்டாய்_துயில்
நீங்கி எழுந்தவுடன் பறந்துவிட்டாய்.
நித்திரையின் நிலவில் என்னை வாடவிட்டாய்_என்
சிந்தனையில் நீ மட்டுமே நிறைந்துவிட்டாய்.

பறந்துவந்தேன் உனைப்பார்க்க முடியாமல்_நான்
பாதிவழி நின்றுவிட்ட பாவியானேன்.
நடந்து வந்தும் உனைச்சேர முடியாமல் நீ கடல்
கடந்து போனதென்ன அன்பே.

சாந்திமனோ.

www.tamilarangam.net

ஒருமரம்,
ஒருவியாபாரி,
விற்பனைக்காகப்பரப்பிவைக்கப்பட்டுள்ள
பலவர்ணத்தொப்பிகள்,
பலவித அளவுகளில்,
தலையுள்ளவர்கள் அணிந்துகொள்ள
வெயிலுக்கும்,மழைக்கும்,
அழகுசெய்வதற்கும் தலையை
மறைத்து தொப்பியை அணியலாம்.
சனக்கூட்டம் மிகநெரிசல்.
தொப்பிக்கு மிகச்சண்டை.
தொப்பி பொருந்தக்கூடியவர்கள் முண்டியடித்து
வியாபாரியுடன் பேரம்பேசினர்.

தலைமுடியில்லாத மனிதன்,கோபம்கொப்ளிக்க
சனத்தை விலக்கி முன்னால் வந்தான்.
மனிதக்கூட்டங்கள் பின்னால் சென்றது.
"அடேய் ஏனிந்த வியாபாரம்?என் தலையை
ஏளனப்படுத்த,கொச்சைப்படுத்த
ஏனிந்த வியாபாரம்!
முடிச்சுருட்டி அப்புறப்படுத்து!
யாரும் இங்கே தொப்பவிற்கக்கூடாது"

தொப்பிகள் சந்தைப்படுத்தவும் வேண்டும்.
தலைகள் காப்பாற்றிக்கொள்ளப்படவும் வேண்டும்.

எவர் தலைக்கெனவும் செய்யப்படாத தொப்பிகள்,
யார் தலைக்கும் பொருந்தலாம்!
வியாபாரி நித்திரைகொள்ளும்போது குரங்குகள்
கூட திருடி,தமக்கு அழகுபார்க்கலாம்.

## தொப்பி

-வேப்பெண்ணை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலம் பெயர்ந்தோர் இலக்கியம் - பார்வையும் பதிவும்

தமிழ்பேசும் மக்களின் விடுதலை தொடர்பாக எம்மிடம் வேறுபட்ட பலஅபிப்பிராயங்கள் இருப்பதாலும் அதனை மக்களிடம் எடுத்துச்செல்லவும், விவாதத்திற்குள்ளாக்கு வதற்காகவும் நானும் இன்னும் இது தொடர்பாய் அக்கறையுற்ற சில நண்பர்களும் சேர்ந்து சஞ்சிகை ஒன்றை வெளியிடவுள்ளோம்..சஞ்சிகை இம்மாதஇறுதியில் உனக்குக்கிடைக்கும்".

இது ஐரோப்பிய தேச மொன்றில் வாழும் எனது நண்பன் எழுதிய கடிதத்தின் ஒருபகுதி.இத்துடன் ஐரோப்பாவிலிருந்து எத்தனை சஞ்சிகைகள் வருகின்றன என எண்ணிப்பார்த்தேன்.37உடன் நின்றது.கடந்தமுறை பட்டியலிடும்போது 45 இருந்ததாக ஞாபகம். நான் சிலவற்றை மறந்து போயிருத்தல் கூடும். போகட்டும்.

அதுசரி ஐரோப்பாவிலிருந்து இவ்வாறு ஏராளமாக சஞ்சிகைகள் வெளிவரக்காரணமென்ன?என்றகேள்வி எம்முன் எழுகிறது.

அயலிலும் தமிழ்நாட்டிலிருந்து ஏராளமானசிறுசஞ்சிகைகள் வெளிவருகின்றது..ஆனால் அவற்றிற்கும்இந்த ஐரோப்பிய தமிழ் சஞ்சிகைகளுக்கும் இடையேயுள்ள ஒருமுக்கியமான வேறுபாடு என்னவென்றால் பெருமளவிலான தமிழ்நாட்டுச்சிறுசஞ்சிகைகள்.அரசியலைப்புறக்கணிக்கின்ற அரசியலலைக் கொண்டவை. ஆனால் இவை அவ்வாறல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்கு ஞாபகம் 84ன் இறுதியிலும் 85 இலும் ஈழத்தில் இதேபோல ஏராளமான சஞ்சிகைகள் வெளிவர ஆரம்பித்தன. தமிழ்மக்களின் விடுதலைப்போரின் எழுச்சிக் காலகட்டமாக அது இருந்தாலும், விடுதலையை முன்னெடுத்த இயக்கங்களின் அரசியல் கொள்கைகளையும், நடைமுறையையும், விமர்சிப்பதற்கும், விடுதலைப்போராட்டத்தைமக்கள்மயப்படுத்தவுமாக அவை வந்திருக்கக் கூடுமென நான் நினைக்கிறேன். இதற்கு அவற்றில் வெளியானவிடையங்கள் சாட்சி.( இவை தவிர ஒவ்வோர் விடுதலை இயக்கமும் தமது கொள்கையை மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்துவும் சஞ்சிகைகளை வெளியிட்டன )

ஆனால் துரதிஷ்டவசமாக தொடர்ந்து வந்த சூழல் இந்த ஜனனாயகக் குரல்களின் தொண்டைக்குள் தோட்டாக்களை வைத்து அடக்கிற்று. முன்னணியில் இருந்த எல்லா இயக்கங்களும் தம்பங்குக்குகெட்டித்தனமாக இக்காரியத்தை ஆற்றியுள்ளன.

இந்த ஜனநாயக மறுப்புச் சூழலும் தொடர்ந்த போரும் ஏராளமானவர்களை நாட்டைவிட்டுப் புலம் பெயர வைத்தது.

இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களின் நமது மண் தொடர்பான அக்கறையும், தாம் தப்பித்து வந்துவிட்டோமே என்கிறகுற்றஉணர்வும் இவர்களை "ஏதாவது" செய்யுமாறு தூண்டியிருக்கிறது. இந்த "ஏதாவதில்" ஒன்றுதான் இந்தச் சஞ்சிகை வெளியீடு. இதையும் தவிர இன்னுமொன்று, இலங்கையின் எப்பாகத்திலிருந்துகொண்டும் எழுதமுடியாத விடையங்களை எழுதக்கூடியவாறான ஒரு ஜனனாயகச்சூழல் அங்குநிலவுகிறது. நான் இப்படிச் சொன்னதும் ஏதோ அங்கு ஜனனாயகம் வாழ்வதாக நீங்கள் கற்பனைசெய்யவேண்டாம். துப்பாக்கிக்குண்டுகள் மிரட்டவில்லையேதவிர, துப்பாக்கிக்குண்டுகள் வருமென மிரட்டல் வருகிறது. இந்த மிரட்டல்களாலும் தடியடிகளாலும் சில சஞ்சிகைகள் ஓரிரு இதழுடன் நின்றுபோனதும் சில தயக்கம் காட்டுவதும் நடந்த,நடக்கிற விடையங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறான ஒருபின்னணியைப் புரிந்து கொண்டு நாம் இச்சஞ்சிகைகளைப்பார்வைக்குட்படுத்தினால் இலகு கருதி இவற்றை நாம் இருபெரும் பிரிவுகளாக வகுத்துவிடலாம்.

ஒன்று நேரடியாக அரசியல் சார்ந்தவை.

மற்றயது,அல்லாதவை.இந்த அல்லாதவைகளுள் தமிழகத்து ஜனரஞ்சகச் சஞ்சிகைகளான குமுதம் குங்குமம்,ஆனந்தவிகடன் வகையறாக்களைப் பற்றி நாம் அக்கறைப்படத்தேவையில்லை. அதேபோல் அரசியல் சார்ந்த இயக்கங்களின் பிரச்சார ஏடுகளாக தம்மையும், தமது கொள்கைகளையும் நியாயப்படுத்த கவனிக்கவும்,பிரச்சாரப்படுத்த அல்ல, நியாயப்படுத்த- வெளிவரும் ஏடுகளைப்பற்றியும் நாம் அதிகம் அக்கறை ப்பட வேண்டியதில்லை.

இந்தவகையில் நேரடியாக அரசியல் சார்ந்த ஏடுக ளாக தூண்டில்,மனிதம்,சிந்தனை,சமர் என்பவற்றைக் குறிப்பிடலாம்.நேரடியாக அரசியல் சாராவிட்டாலும்அது பற்றிய பிரக்ஞையுடன் சமூகம்,கலாசாரம், விஞ்ஞானம், பெண்ணிலைவாதம் போன்ற பலவிடையங்களுடன் வெளிவருகின்ற சஞ்சிகைகளாக சுவடுகள், பனிமலர், அ,ஆ,இ, ஓசை, அக்கினிக்குஞ்சு இப்படிப்பலபெண்ணி லைவாதம் தொடர்பாய் சக்தி என்கிற சஞ்சிகையும் வெ ளிவருகிறது.

இனி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சஞ்சிகை பற்றி விரிவாகப்பார்ப்போம்.

அடுத்த இதழில் தூண்டில் பற்றி.

நன்றி- சரிநிகர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரத்திற்கான வெளிப்படையான விவாதம்

எனது கருத்து அடிப்படையில் குடியரசானது வெளிப்படையான கருத்துச் சுதந்திரத்தையும், அமைதியான வாழ்க்கையையும் கொண்டது. ஆனால் டென்மார்க்கிலோ அல்லது இலங்கையிலோ எந்த ஒரு கட்சியோ எந்த ஒரு குழுவினரோ, எந்தவொரு அரசாங்கமோ உண்மையானது அல்ல. உலகத்தில் சில இடங்களில் ஆட்சியாளர்கள் அந்நாட்டு மக்களுக்கு எதிராக வல்லமையையும், பலவந்தத்தையும் பிரயோகிக்கின்றார்கள் என்பது எனது அடுத்த கருத்தாக அமைகின்றது. இம்முறையானது இராணுவ ஆட்சியாளர்களிடமிருந்தும், சர்வாதிகார ஆட்சியாளர்களிடமிருந்தும் எங்களுக்குத் தெரிந்ததே. மக்களுக்கு பாதுகாப்பின்மையினால் இது கண்டிக்கப்படத்தக்க முறையென கருதுகின்றேன். இது மேலும் பயங்கரவாதத்தையே வளர்க்கும். வெளியரங்கமான மக்களின் விவாதம் மட்டுமே பலப்படுத்தப்பட்ட எதிர்கால குடியரசையும் உறுதியான அமைதியையும் கொண்டிருக்கும். கடந்த சில சஞ்சீவிகளில் வாசகர்களுக்கு இலங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கை.அரசாங்கத்தினதும், இயக்கங்களினதும் நடவடிக்கைகள் பற்றி சில விமர்சனங்கள் வெளியாகியிருந்தன. புலிகளின் டென்மார்க் கிளையிலிருந்து எதிர்விமர்சனமானது Holstebroல் உள்ள தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கத்திற்கு கிடைத்திருந்தது.ஏனெனில் எங்களால் வெளியிடப்படும் பத்திாிகையில் அரசியலும், இலங்கையில் வாழும் மக்களின் நிலைபற்றியும் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தமையே.விமர்சனங்களின் கவனத்திற்கு தமிழ் டனிஸ் நட்புறவுச் சங்கத்தின் சட்ட யாப்பில் என்னசொல்கிறது என்றால் தமிழ் டனிஸ் நடபுறவுச் சங்கமானது.......................................................

கொலஸ்ரப்ரோ தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கத்தின் சட்டஅமைப்பு

1.தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கம் கொல்ஸ்ரப்புரோவை அமைவிடமாகக்கொண்டதும் சுதந்திரமான ஜனநாயக, அரசியல்,சாதி,மத வேறுபாடற்ற சங்கமாகும்.

2.குறிக்கோள்...........................

(அ) தமிழர்களினது சமுதாய கலாச்சார நிலைப்பாடுகள் பற்றி,டெனிஸ் மக்கள் மத்தியில் ஒரு கண்ணோட்டத்தையும் , புரிந்துணர்வையும் ஏற்படுத்துதல்.

www.tamilarangam.net

நட்புறவுச் சங்கத்தின் நிர்வாகசபையா னது சஞ்சீவியில் என்னதான் எழுத வேண்டும் என்று நேரடியாக தலையி டுவதில்லை. சஞ்சீவியின் ஆசிரியர் குழுவின் வெளியீடுகளை நிர்வாக சபை தணிக்கை செய்ய விரும்பவில் லை. புத்தகத்தில் என்ன பிரசுரிக்கப் படவேணடும் என்பது ஆசிரியர் குழு மட்டுமே முடிவெடுக்கின்றது. ஆனால் பத்திரிகைக் குழுவானது நட்புறவுச்ச ங்கத்தின் நோக்கங்களை கடைப்பிடி க்கவேண்டும். கடைப்பிடிக்கின்றது.

நட்புறவுச் சங்கத்தின் நிர்வாக சபையானது சஞ்சீவியின் பிரசுரங்க ளுக்கு பூரண ஆதரவு அளிக்கின்றது. ஆசிரியர்கள் எப்போதும் நல்ல,கூடா த கருத்துக்களை முன்வைக்கலாம். அதன்நோக்கம் என்னவெனில் ஒரு வெளிப்படையான கருத்துப்பரிமாற்றத் தை உண்டாக்கல் என்பதாகும். எங்க ளுடைய நோக்கமானது நட்புறவுச்சங் கமோ அல்லது சஞ்சீவியோ நேரடியா க ஒரு குழுவினருக்கோ, கட்சிக்கோ இலங்கையிலோ அல்லது டென்மார்க்கி லோ உதவிசெய்வது அல்ல. ஆனால் குழுக்களுக்கும் கட்சிகளுக்கும் இடை யில் நடைபெறும் பேச்சுவார்த்தை களை,ஆலோசனைகளை கண்டனம் செய்யவும்,பாராட்டவும்,வாசகர்களிட மிருந்து பெயர் விலாசமிட்டு வரும் கடி தங்களை பதிக்கவும் பூரண உரிமை உண்டு.

Per Daugbjerg

தலைவர் தமிழ் டெனிஸ் நட்புறவுச்

சங்கம்

தமிழாக்கம் சி. கருணாகரன்

கொல்ஸ்ராப்புரோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சகுனி தீக்சித்

ஈழத்துரோக அமைப்புக்களை இந்திய-இலங்கை அரசுகள் தமது சொந்த நலன்களுக்காக தமதுகட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதுதமிழ்மக்களின் அரசியல் வரலாற்றில் ஒன்றும் புதிய விடையம் இல்லை.

செயலிளந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரத்துடன் அண்மையில் டெல்லியில் நடந்த இரகசியப் பேரங்களின் பின்பு 50 லட்சம் ரூபாய் நிதியளித்துள்ளதாக செய்திகள் கசியத்தொடங்கியுள்ளது.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சோலங்கியும், செயலாளர் ஜே.என்.தீக்சித்தும் த. வி. கூட்டணியின் தூதுக்குழுவைச் சந்தித்துள்ளனர்.இந்ததீக்சித் முன்னைநாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என்பதும் ராஜீவ் அரசின் (இந்திய அரசின்)பிராந்திய மேலாதிக்க கொள்கைகளுக்காக சதி ஆலோசனைகள் வழங்கியதுடன்,இந்திய அரசின் சார்பாக புலிகள் உட்பட ஈழஅமைப்புக்களுடன் பேரப் பேச்சுக்கள் நடத்திச் செயற்பட்டவருமாவார்.

இந்தவிதமாகசகுனித்தனமானநடவடிக்கைகள் மூலம் இந்திய அரசின் நலன்களுக்கு உழைத்ததன் மூலம் இப்போது இந்தியவெளியுறவுச் செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ளதுடன் தனது சகுனித்தனமானவேலைகளை ஆரம்பித்துள்ளதற்கான ஆதாரமே த.வி.கூட்டணிக்கான 50 லட்சம் நிதி உதவியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்

அன்பான சஞ்சீவி ஆசிரியர்க்கு

வணக்கம். நான் இந்த நாட்டிற்கு வந்து ஒன்பது மாதங்கள் ஆகின்றது. உங்களின் மலரில் 10,அல்லது 11மலரை வாசித்துள்ளேன். நல்ல நூல்களை வாசிக்கும் என்போன்ற வாசகர்களுக்கு வெளி நாட்டில் சஞ்சீவி போன்ற ஆக்கங்கள் கிடைப்பது ஒரு வரப் பிரசாதமே.

கதை கவிதை போன்ற பகுதிகள் நான் அதிகம் விரும்பிப்படிக்கும் பகுதி. சஞ்சீவியின் பக்கங்கள் கூடி நிறைய ஆக்கங்கள் வரவேண்டும் என்பதேஎன் ஆவல்.

நன்றி.
இப்படிக்கு
வாசகி
-மனோசாந்தி.-

---

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு

சஞ்சீவி (மலர் 18)பார்த்தேன் துணிச்சல் மிகு வீச்சு. நேர்மையானபத்திரிகைத்தர்மம்.

அன்புடன்
-உதிசபாபதி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லண்டன்
3.3.92.

ஆசிரியர் குழு/சஞ்சீவி

அன்புடையீர் சஞ்சிகையின் பிரதிகள் கிடைத்தன. சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

முதல் இதழிலிருந்து வெகுதூரம் வந்துவிட்டீர்கள் சிறுவர்பகுதி போன்றவை சஞ்சீவி போன்ற சிறு சஞ்சிகைக்கு அதிகம்உதவமாட்டாஎன்பதைநீங்கள் அடையாளம் கண்டதுபோற் தெரிகிறது.சிறுவர்கட்கான தனிநூல்களாக வெளியிடுவது பற்றியோசிக்கலாம்.குறுக்கெழுத்துப் போட்டிகள் அதிகம் பயனற்றவை.குறுக்கெழுத்துப்போட்டிகளைச் சிந்தனைக்குச் சவாலாக அமைக்க அதிகம் உதவாது.(ரோமன்,ஸிரிலிக, கிரேக்க எழுத்துமுறைகள் கூடுதலாக வசதியானவை.)

இறுதி இதழ்களில் எடுக்கப்பட்ட தெளிவானநிலைப்பாடு நம்பிக்கையூட்டுகிறது.விடுதலைப்புலிகளைவிமர்சிக்கும் எவருமே ஏதாவது மாற்று இயக்கத்தை ஆதரிப்பவராகத்தான் இருக்கவேண்டும்என்றுகருதும்நிலை மிகவும் கவலைக்குரியது.இயக்கங்கட்கு வெளியே அரசியற்சிந்தனை இருக்கக்கூடாது என்று இவர்கள் நினைக்கிறார்களா? அல்லது விமர்சிப்பவர்களை எல்லாம் இயக்கமுத்திரை குத்தி ஒதுக்க முனைகிறார்களா?இது அறியாமை என்றால் இரங்கத்தக்கது.அகம்பாவமென்றால் கண்டிக்க வேண்டியது.பாரபட்சமற்ற உங்கள் விமர்சனப்பார்வையை கைவிடாதீர்கள்.விமலேஸ்வரன் விஷயத்திலும் நீங்கள் மேலும் உறுதியாகஎழுதியிருக்கலாம். விமலேஸ்வரனை நினைவுகூர்வதில் எவரது அனுமதியோ,அங்கீகாரமோ சஞ்சீவிக்கு அவசியமில்லை.சஞ்சீவியின் உறுதியான நிலைப்பாடு ஒரு நல்ல அறிகுறி. விடுதலைப்புலிகளின் சில ஆதரவாளர்களது மிரட்டல்களும் வேறு சிலரது "சாம,பேத" வற்புறுத்தல்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களது நிலைப்பாட்டை நீங்கள் கடைப்பிடிக்கும் சம நிலையான போக்கினின்று வழுவைத்தாண்டாது என நம்புகின்றேன்.

மீராவின் எழுத்தில் நல்ல ஆற்றல் தெரிகிறது. அதை வளர்க்க வேண்டும்.படைப்பின்வசன அமைப்பு கருத்துச்செறிவு போன்ற அம்சங்களில் உள்ள குறைபாடுகள் கவலையீனங் காரணமானவைபோற் தெரிகிறது.

முரளி பாரம்பரியக் கலைகள் பற்றிச்சுருக்கமான கட்டுரைத்தொடர்களைத்தருவது நல்லது. (தமிழர் பிள்ளைகட்கு பரதநாட்டியம் கற்பிப்பது பற்றிஎனக்குமகிழ்ச்சியா,துக்கமாதெரியாது.பரதநாடடியம் அரங்கேற்றத்துடன் முடிவுபெறுவதுதான் உண்மையான நிலை. கலை பற்றிய உண்மையான ஆர்வக்குறைவு நமது உத்தியோகம்- வியாபாரம்- அந்தஸ்து ஆதிக்கத்துக்குட்பட்ட சமுதாயத்தில் குறைவு.நமது ஆர்வம் மற்றவர்கட்கு நமது மேம்பாட்டைக் காட்டும் ஒரு சாதனமே போற் தெரிகிறது.)

கவிதைகள் பொதுவாகவே பலவீனமானவிஷயங்களாக உள்ளன.இது சஞ்சீவியின் பிரச்சினை மட்டுமல்ல. பல தமிழ்ச் சஞ்சிகைகளிலும் உள்ளகுறை. புதியபடைப்பாளிகளுக்கு மரபுக்கவிதைபற்றியஅறிவு இல்லாதே போய்விட்டது போற்தெரிகிறது.புதுக்கவிதை,கவிதை என்றால் என்ன என்ற தெளிவின்றியே எழுதப்படுகிறது.விலக்காக ஒருசிலரே புதிதாக எழுதுகின்றனர்.(கி.பி.அரவிந்தன்,சுகன்,ரஜீன்குமார் எழுத்துக்களில் சில தரமான கவிதைகளைக்கண்டுள்ளேன்)மரபுக்கவிதைத்தோற்றத்தில் உள்ளவை பல; சமய ஓசை நயமும், சந்த உணர்வும் இல்லாது உள்ளனசிறுகதைகள் ஊக்குவிக்கப்பட வேண்டியன. டேனிஸ் வாழ்வு பற்றியும் புலம்பெயர்ந்த வாழ்வுபற்றியும் அறியவும் அறிவை ஆழப்படுத்தவும் அவை உதவுவன.நல்ல ஆக்க எழுத்தாளர்கட்கு அவை பயனுள்ள தூண்டுகோல்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் விரிவாக எழுத இயலாமைக்கு நேரவசதி யீனம்காரணம்.அதற்காகவும்,காலம்கடந்தமைக்காகவும் மன்னிக்கவும்.

அன்புடன்
சி.சிவசேகரம்.

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு!

உங்கள் மலர் 18 கிடைத்தது.வாசித்தேன்.வாசிக்கிறேன். இன்னும் கீழே வைக்க முடியவில்லை.காரணம் அங்கு கண்ட ஆணித்தரமான அரசியற் கட்டுரைகள் , விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிக்கு உங்கள்பதில் பொருத்தமானசவுக்கடி.போகின்றபோக்கைப்பார்த்தால் இலங்கைத்தமிழ்மகன் ஒருவன் மலசலம்கழிக்கப்போக முன்னர் மக்கள் முன்னணியிடம் அனுமதி பெறவேண்டும்போல்இருக்கிறது.விடுதலைப்புலிகள்மக்கள்முன்னணி கொடுத்த அறிக்கையில் மக்களுக்காக புலிகள் என்றநிலைமாறி எம்மண்ணில் மக்களே புலிகள் என்ற நிலைக்கு வந்துவிட்டதாக தெரிவித்திருந்தார்கள்.எங்களுக்கு வேண்டியதுமனித உணர்வுகள் கொண்ட மக்கள்கூட்டமே தவிர மிருகஉணர்வுகளைக்கொண்ட ஆயுதபாணிகளல்ல என்பதனை அவர்கள் கவனத்திற்குகொண்டுவர விரும்புகின்றோம்.

வளவன் கவிதைகள் மிகவும்பாராட்டுக்குரியது. வளவுக்குள் இருக்கும பட்டமரத்தை வெட்டி எறிந்துவிட்டு புதிய ஒரு தாய்மையான விடுதலை விதையினை - இடுவதற்கு அவரது கவிதைகள் கால்வாய் ஆகட்டும். பாலஸ்தீன விடுதலைப்போராட்டம் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் மிகவும் வித்தியாசமானதாக இருந்தது.

உங்கள் 18 மலரில் மீராவின் கவிதைத்தொடரைக் காணவில்லை.காரணத்தை அறியவிரும்புகின்றேன்.

19.ஆவது மலரினை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் (மிகவிரைவாக)

அன்புள்ள வாசகன்
சசி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




சிப்பி

இரண்டு

நந்தினி குடும்பம் இங்கு குடியேறிய இந்த ஆறு மாதத்தில் இரண்டு மூன்று தடவைதான் நந்தினியை தெருவில் கண்டிருக்கின்றேன். ஒருநாள் மிளகு பிஸ்கடுகளை கொஞ்சம் அதிகமாய்த் தயாரித்துவிட்டேன். நந்தினி வீட்டுக்கு கொடுக்கலாம் என்று சில பிஸ்கட்டுகளை எடுத்துக் கொண்டு அவர்களின் வீட்டுக்கு போயிருந்தேன். ஏற்கனவே மூன்று விருந்தினர்கள் வந்திருந்தார்கள். எனவே கொடுத்துவிட்டுத் திரும்ப நினைத்த என்னை உள்ளேவரும்படி நந்தினியின் கணவன் வேண்டிக்கொண்டான்.

உள்ளே சென்ற போது வீடு அடியோடு மாறியிருந்ததைக் கண்டு கொண்டேன். எலின் வசித்தபோது ஒரேயொரு பழையவானொலிப்பெட்டியும் ஏராளமான பூஞ்செடிகளும் அங்கிருந்தது. நந்தினி குடும்பத்தினர் வீடு நிறைய மின்சாரசாதனங்களாக நிரப்பியிருந்தார்கள். தொலைக்காட்சியில் ஒரு கறுப்புத்தோலங்கி அணிந்த மனிதன் சுழன்று சுழன்று ஏராளமானமனிதர்களை தாக்கிக்கொண்டிருந்தான். அவர்களது விருந்தினர்கள் என்னைக்கண்டதும் எழுந்துவந்து கை குலுக்கவுமில்லை, முகமன் கூறி அறிமுகம் செய்து கொள்ளவுமில்லை. அவர்களுக்குப்பக்கத்திலேயே நானும் இருக்க வேண்டியிருந்தது. நான் என்னை அறிமுகம் செய்துகொண்டபோது மிகவும் பொறுமையிழந்தவர்களாகத் தெரிந்தார்கள். அந்தளவுக்கு அவர்களின் கவனம் தொலைக்காட்சிப் பெட்டியில் இருந்ததை கவனித்தேன். நந்தினியின் கணவன் சமையலறைப்பக்கம் பார்த்து நந்தினி என்று தொடங்கி உரத்தகுரலில் ஏதோ சொல்லிவிட்டு எங்களுடன் வந்து அமர்ந்து கொண்டான். அவர்கள் எவரும் என்னுடன் பேசுவதில் ஆர்வம் காட்டவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கே இருக்க எனக்கு
மிகவும் சங்கடமாயிருந்தது.
உடனே எழுந்து போவது
சரியில்லை என்றும் தோ
ன்றியது.வேறுவழியின்றி
நானே பேச்சுக்கொடுக்க
ஆரம்பித்தேன்.இவ்வளவு
ஆர்வமாகப்பார்க்கிறார்க
ளே அது என்ன இலங்கை
ப்படமா என்று கேட்டேன்.
அது ஒரு புகழ்வாய்ந்த
நடிகர் ஒருவர் நடித்த இந்
தியத்தமிழ்ப்படம் என்று
வந்திருந்த விருந்தினர்
களில் ஒருவன் மனமிர
ங்கி எனக்குப்பதிலளித்
தான்.இப்போது அந்தக்
கருப்பு மனிதன் விநோ
தமாய் உடையணிந்திருந்
த ஒரு பெண்ணின் பின்
னால் பாடியபடி ஓடிக்
கொண்டிருந்தான்.குழந்
தைகள் எங்கே என்று
கேட்டேன்.தாயுடன் உள்
ளே இருக்கிறார்கள் என்
று நந்தினியின் கணவன்
சொன்னான். தேனீர்க்
கோப்பைகளுடன் நந்தினி
வந்தாள்.இனி அவள் என்னு
டன் வந்திருந்து பேசுவாள்
என்று நினைத்தேன்.
ஆனால் தேனீர்க்கோப்பை-
பகளை வைத்துவிட்டு உட
னே உள்ளே சென்று விட்
டாள்.சம்பிரதாயத்திற்குக்
கூட ஒரு வார்த்தை கூற
வில்லை.எனக்கு எரிச்சல
—ாக இருந்தது.என்னவித
-மான மனிதர்கள் இவர்க
ள்? தேனீரில்; நாக்கில்
ஒட்டுவதுபோல்சீனியை
கலந்திருந்தார்கள்.நாகரீ
கத்திற்காக இரண்டு மிட
றுகளை உறிஞ்சி விட்டு
எழுந்து கொண்டேன்.
தொலைக் காடசியைப்
பார்த்தபடியே விருந்தின
ர்களும் நந்தினியின்
கணவனும் விடைகொடு
த்தார்கள்.எழுந்தபின் த
ான் கொண்டு வந்த
யிளகுபிஸ்கட்டுக்களை
கொடுக்க மறந்ததை
உணர்ந்தேன்.குழந்தை
களிடமே கொடுக்கலா
மென்று சமையலறைக்
கதவுகளைதட்டினேன்.
நந்தினிதான் திறந்தாள்.
திறந்ததும் என்னை
எதிர்பார்த் — திருக்காத
தால் திகைத்துப் போ
னாள்.குளந்தைகளிடம்
கொடுங்கள் என்று பிஸ்கட்
டுகளை அவளிடம் நீட்டிய
போதுதான் அவள் முக
த்தை நேருக்குநேர் பார்
த்தேன். இப்போது நான்
திகைத்தேன்.அவளுடன்
பேச நினைத்தேன்.ஆன
ால் அவளின் சங்கடத்தை
உணர்ந்துகொண்டு...........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்பிப்பாராமல் படியிறங்கினேன். வழமையான இரத்த அழுத்தம் அதிகரிக்கத்தொடங்கியது. நந்தினி தேனீர்க்கோப்பையை வைத்துவிட்டு உடனே மறைந்து போனதற்கு இதுதானா காரணம்?

எப்படியாவது நந்தினியைத் தனியே சந்தித்துப் பேசினால்தான் மனம் அமைதி அடையும்போலத் தெரிந்தது.
அன்று இரவு வெகுநேரமாகியும் என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. நந்தினியின் வீங்கிச் சிவந்திருந்த முகமும், உதடுகளின் கீழிருந்த இரத்தக்கோடும் மறுபடியும் மறுபடியும் மனதில் வந்து நின்றன.

(தொடரும்)

மறுபிரசுரம்
*சக்தி* சஞ்சிகையிலிருந்து.

POSTFACH-12
3000 BERN-11
SWITZERLAND.

BAT.E BOITE-188
150,RUE-L.RECHOSSIERE
93300-AUBERUILLIERS
FRANCE.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் 8வது அறிக்கையிலிருந்து...

## சட்டத்தினதும் மனிதவர்க்கத்தினதுமான தரக்குறைப்பும் பூரணயுத்தத்திற்கான இழுத்தடிப்பும்.

*போர்-11ஆனி 90-ஆவணி 91-ஓராண்டு அறிமுகம்*

ஒரு வருடத்திற்கு முன் போராட்டம் தொடங்கியபோது அரசு பலமானநிலையில் இருந்ததாகத் தெரிந்தது.விடுதலைப்புலிகள் தமது சொந்த மக்கள் மத்தியில் பல எதிரிகளை உருவாக்கியவேளை, அரசு கடந்த 10 ஆண்டுகளில் செய்த குளறுபடிகளிலிருந்து பாடம் படித்திருக்கும் என பலரும் நினைத்தனர்.89 மார்கழியில், புலிகளின்வெற்றிகரமான மட்டுநகர் பிரவேசம், கட்டாயப்படுத்தி சேர்க்கப்பட்ட 200-300

www.tamilarangam.net

தமிழ்த்தேசிய இராணுவத்தினரை இலங்கை அரசின் பெருமிதமான கண்களின் முன்னால் படுகொலை செய்ததில் முடிந்தது.தமிழ் மக்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் பற்றி விடுதலைப்புலிகள் அலட்டிக்கொள்ளவில்லை.துரதிஸ்டமான இந்த வஞ்சிக்கப்பட்டோரின் உடல்கள் மாநகரசபையின் குப்பை அள்ளும் லாரிகளில் எடுத்து அப்புறப்படுத் தப்பட்டன. இவர்கள் கிழக்கில்போலல்லாதுவடக்கில்,யாழப்பாணத்தாருக்கும் அவர்களது வெளிநாட்டுத்தொடர்புகட்கும் தலைசாய்த்து ஓரளவு தந்திரோபாயத்துடன் நடக்கத்தலைப்பட்டனர். வடக்கில் தனியானகூடலைகளிலும்பாக்குநீரணையிலும் இக்கொலைகளை நடத்தி முடித்தனர். நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப் படவேண்டுமென திடீரென அரசு 11.6.90 இல் விழித்துக் கொள்ளும் வரை,இலங்கைப் படைகள் இப் படுகொலைகளுக்கு வானத்தாலும் கடலாலும் உதவி வழங்கின.

போர் ஆரம்பித்தவேளை,விடுதலைப்புலிகள் தப்புக்கணக்குப்போட்டதாகவேதெரிகிறது.மட்டு.மாவட்டத்தில் நன்கு தயாரிக்கப்பட்ட பங்கர் எதிர்ப்புநிலைகளிலிருந்தும் பின்வாங்கியதிலிருந்தும் அவர்களின் ஆரம்ப பலவீனம் தெரிகிறது. ஆனால் அரசின் போக்கும் உயிர்களைப்பற்றி எக்கவலையும் கொள்ளாததுடன் பொறுப்பற்றும்போராட்டத்தைதொடரக்கூடியவி.புலிகளின் தன்மையினாலும்வி.புலிகளுக்கே சாதகமாக இருந்தது.தமிழ் மக்களின் ஈடுசெய்ய முடியாத இழப்புக்கள் பற்றி கூறத்தேவையில்லை.

## மட்டுநகரில் ஒரு முரண்பாடு

கொக்கட்டிச் சோலையின் துன்ப நிகழ்வுகள் 1991 ஆனி 12 ம் திகதி நடப்பதற்கு ஒரு வாரம் முன்பு இச்சம்பவம் மட்டுநகர் மாநகர மண்டபத்தில் நிகழ்ந்தது.மட்டுநகர் மக்கள் மத்தியில் பேசிய பிரதமமந்திரி பழையவற்றை மறக்கும்படி கூறியதுடன,சுமுகநிலை உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார். கூட்டம் முடிந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதமர் மேடையை விட்டு இறங்க முற்பட்டபோது ஒரு "யேசு சபை"யைச்சேர்ந்தவரும் மட்டக்கிளப்பு சமாதானக்குழு உறுப்பினருமான குரு ஒருவர் பிரதமரிடம் "நீங்கள் பத்திரிகையில் உள்ளவற்றை நம்பக்கூடாது. இங்கு பயமான சூழ்நிலையே உண்டு.பயமான நிலையும்,நிச்சயமற்ற நிலையும் இருக்கும்வரை சுமுகநிலை இருக்க முடியாது.கடந்த வாரம் கூட 12 பேர் காணாமல் போய் விட்டனர்." என்றார். இதற்குப்பதிலளித்துவிட்டு பிரதமர் அடுத்தவரிடம் போனபோது இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு இராணுவ ஜெனரல் குருவிடம்வந்து "குருவே! இங்கு நடப்பது ஒரு போர் என்பது உமக்கு தெரியவேண்டும்.ஒரு போரில் மக்கள் இறப்பார்கள், காணாமற்போவார்கள். ஜப்பானில் என்ன நடந்தது" என்பதைப்பாருங்கள் என்றார.அடுத்தவாரமே கொக்கட்டிச்சோலை படுகொலைகள் நடந்தன.இதேவேளை மட்டுநகரிலிருந்து 10 மைல் சுற்றுவட்டாரத்தில் 2500 பேர் காணாமற்போய்விட்டனர்.

இராணுவம் தெற்கில் ஜே.வி.பி யுடன் போரிடும் போது நடந்தமாதிரியே நடக்கிறது.தெற்கில்ஜே.வி.பி பற்றி மக்கள் தகவல் கொடுத்தமாதிரியல்லாதுதமிழ் மக்கள் வி.புலிகளுக்குப்பயத்தில் தகவல் கொடுப்பதில்லை. என இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்கா கூறினார்.

மட்டுநகர் சமாதானக்குழுவின் சிரேஸ்டஉறுப்பினர் "வி.புலிகள் பொறுப்பில் இருந்தபோது தாம் எந்தப்பிரச்சனையையும் எழுப்பியதில்லை.அமைப்பின் மனித உரிமை மீறல்கள் பற்றி எந்த ஆவணக் காப்பும் செய்யவில்லை. ஏனெனில் பேசுவதில் அதற்கு விருப்பமும் இல்லை.யாரையும் சகித்துக்கொள்ளவும் முடியாது.ஆனால் அரசின் சில பொறுப்பான உத்தியோகத்தர் தற்போது பொறுப்புள்ளோராக இருக்கமுற்படுவது வரவேற்கத்தக்கதே.அரசு ஆக்கபூர்வமானதாயின்,வி.புலிகள் ஆளுமையில் மக்கள் எப்படி மௌனமாக இருந்தார்கள் என்பதை அலட்சிய

www.tamilarangam.net

மாக திரும்பத்திரும்பச் சொல்வதைவிட்டு, நாட்டை சட்டபூர்வமானதாக கட்டிஎழுப்பும் பணியில்,மக்கள் மீதான கவனத்தையும் அவர்கட்கு கௌரவத்தை யும் கொடுத்து கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்.

## அரசியல் நிறுவனமும் தொடர்பு சாதனமும்

மிகவும் வெறுக்கத்தக்கது என்னவென்றால், இந்த அரசு கடந்தகால அரசுகளின் தவறுகளையல்லாது தான் இழைத்த தவறுகளைப் பற்றிய உண்மைகளை யெல்லாம்மக்களுக்குக்கூறும்திறமைபடைக்காததே. தன் தவறுகளுக்கு இராணுவமும் மக்களுமே தண்ட னை ஏற்கவேண்டியுள்ளது.

சிங்கள மக்களுக்கு கிடைக்கின்ற செய்திகள் இருட்டடிப்புக்களே.யாழ்ப்பாணத்திற்கு அனுப்புகின்ற உணவு புலிகளுக்காகவே என்ற எண்ணம்விதைக்க ப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கும் இப்படிவிதைக்கப்பட்ட கருத்துக்களினால் அவர்களும் கீழ்ப்படிவற்றவிதமா கவே நடக்கின்றனர்.

இனவாதமானது, அது சிங்கள மக்களிடமிருந் தோ தமிழ் மக்களிடமிருந்தோ எதுவானாலும் மக்களை சிறுமைப்படுத்துவதுடன் முட்டாள்தனமாக வும் வன்முறையாளர்களாகவும் ஆக்குகின்றது.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உண்மைகள் கற்பனையாக்கப்படுகின்றது

தர்ஷன்



காலை நேரம்வாசலில் சைக்கிள் மணிகேட்கிறது. தபாற்காரனாகத்தான் இருக்கவேண்டும்.
சண்முகத்தார் வெளிநாட்டுத்தபாலுடன் வருகிறார்.
விசா எடுக்க நான் காசுக்குகெங்கை போறது.....ம்...
கொஞ்சமே நஞ்சமே.......
தையலாசியிலையிருந்து பனங்காவரை நெருப்பு விலை. இதுக்குள்ள
இங்கயொரு பசுமைப்புரட்சி.................ம்.....................
சண்முகத்தார் அந்த இடிபட்ட கட்டடத்துக்குள் மனசை அலைபாய விட்டுக்கொண்டிருக்கிறார்.
சண்முகத்தாரின் கணக்காளர் பதவிபோய் பலகாலமாகிவிட்டது.
மூத்தவன் வெளிநாட்டில்.
இளையதுகள் இரண்டும் படிக்குதுகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னதானிருந்தாலும் இந்த நாட்டுப்பிரச்சனை இல்லையெண்டால் எவ்வளவு சந்தோசமான வாழ்வு.........
சந்தோசத்திலிருந்த சண்முகத்தாருக்கு தலையிடி வந்துவிட்டது.திடீரென இரண்டாவது இயக்கத்துக்கு ஓடிவிட்டான்.
சண்முகத்தார் விடுவாரா.. "விலை கொடுத்துத்தான் விடுதலை வாங்கவேண்டும்.உயிர் கொடுத்தல்ல" என்ற சண்முகத்தார் தத்துவத்தை வெளியிட்டவராயிற்றே.கொழும்புக்குப் போகவேணும்.கொழும்புக்குப் போறதுக்கும் விசா எடுக்கவேணும்.விசா எடுக்கிறதுக்கும் குறைஞ்சது பத்தாயிரமாவது வேணும்

போனகிழமைதான் இயக்கப்பொடியள் காசுக்கு வந்தவங்கள்.காசு காசு செப்புச்சல்லியுமில்லை..........
இப்படிச் சொன்னவர் இப்போது கொழும்பு வருவதற்காக எப்படி காசுடன் விசாக்கந்தோருக்குபோக முடியும்.எழுதினார் கடிதம்......அவசரக்கடிதம்......
மகனே நீ உவ்விடம்நெருக்கடியானபிரச்சனைகள் மத்தியிலும் பல நாடுகளுக்கு ஓடித்திரிந்து இயக்கத்துக்காக பணம்வசூலிக்கிறாய்,ஆனால் இங்கை இவன் இரண்டாவது உதே இயக்கத்துக்குப் போட்டான்.உன்னால்முடியும்.உடன் அவன்வீட்டைவரோணும். சண்முகத்தார் பல விடையங்களிலும் அனுபவப்பட்டவர்.ஆப்பிளுக்கேக்கை வாலில்லாதகாரணத்தால் கையை வைத்து இழுத்தவர்.யூரோப்பில் மகனை இயக்கவேலை செய்யவிட்ட தியாகி.

ㅁ ㅁ ㅁ ㅁ ㅁ ㅁ

வடக்குக் கிழக்குப்பகுதிகளில் பலரது வீடுகளில் வானொலிப் பெட்டிகள் இருந்தும் சில வீடுகளில் மட்டுமே வானொலியைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது.முன்பு ஏ.எம்.அலைவரிசையில் ஒலித்த வானொலிகள் இப்போது **F.M** ற்கு மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன.இந்தமாற்றம் எல்லாம் சினிமாப்பாடலைக்கேட்பதற்காக அல்ல.பொம்பர் விமானங்களின் சத்தம் கேட்டதும் இந்த **F.M** இல் தயாராக இருக்கும் வானொலிகள்,



ஏகுற்ஸ்வி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சைக்கிள் டைனமோவை ச்சுற்றிவிட்டுஇயங்க ஆரம்பித்துவிடும்.விமானத்தினுள்ளிருப்போர் தமது செய்தித்தொடர்புகளை கூடுதலாக F.M கருவிகளின் மூலமே வைத்துக் கொள்வர்.இவர்களதுF.m தொடர்புகள் பொதுமக்களிடமிருக்கும் F.m வானொலிகளின் மூலம் ஓரளவு தெளிவாகக் கேட்கலாம்.அவர்களது பேச்சுக்கள் கூடுதலாக சிங்களத்திலேயே இருக்கும்.சிங்களம் தெரிந்தோர் வானொலி முன்னிருந்து நன்கு புரிந்து கொண்டு தம்மையும் மற்றையோரையும் எந்த வகையில் பாதுகாக்க வேண்டும் என்பதைப்புரிந்து கிடங்குகளுக்குள்ளோ அல்லது வேறுவகையிலோ பாதுகாத்துக்கொள்வர்.இதுவோர் முன்னெச்சாிக்கையாக அமைகிறது.

தற்போதெல்லாம சிங்களம் தெரிந்தோர்வாய்விட்டுச் சொல்லவேகூசுகிறார்கள்.மொழிபெயர்ப்பு உயிராபத்தையேகொண்டுவந்திருக்கிறது.முன்பு லொறிகள்மூலம் எரு ஏத்துவதற்காக வந்த-எத்தனையோ அப்பாவி ஏழைச் சிங்களவர்கள் அடித்தும்,சுட்டும்,எரித்தும் பல சித்திரவதைகள் செய்யபட்டு கொல்லப்பட்டார்கள்.இந்தவிடையத்தில் சாவகச்சேரி சந்தைப்பகுதி சாட்சி சொல்லத் தவறாது....என்னும் பல இடங்கள்.......சிங்களவர் தமிழர்களுக்கு செய்தவற்றை மறந்துவிட்டோமா? என்று கேட்கலாம்.எத்தனையோ ஆண்டுகளாக எம்மவர்கள் எமது காதுகளில் நிறையப் பூ வைத்துவிட்டு சிங்கள அரசுகளுக்கும் அமைச்சுகளுக்கும் செருப்பாகத் தேய்ந்தார்கள்.சிங்கள மந்திரிகள் மலகூடம் போய்வரும்போதெல்லாம் இவர்கள்போய் கழுவிவிட்டார்கள்.

எம்முன் கூடியதொகையானதமிழர்கள் இவர்களை நம்பி வாக்குப்போட்டதைவிட கள்வாய் பல வாக்குகள்போட்டு பா.உ களாக்கி பாடம் படித்தது போதும்.......

இவர்களது ,சிங்கள அரசினது பிழைகளையும்,ஒடுக்கு முறைகளையும் சொல்லி அவற்றை போராட்டத்தின் மூலமே நிவர்த்திக்க முடியும்,

www.tamilarangam.net

நாம்பிரிந்துவாழவேண்டும்.
எனச்சொல்லிமுன்மாதிரி
யாக வெளிக்கிட்ட இயக்க
ங்கள் எல்லாம் என்ன செ
ய்து விட்டன.எல்லா இயக்
கங்களும் பாசிசத்தை
செயற்படுத்திக்கொண்டே
தேசியத்தைப்பேசுகின்றன.
இவர்கள் ஆரம்பத்தில்
வைத்த குறியை பிழை
என்றுசொல்லவரவில்லை.
இப்போது அம்பு போகவே
ண்டிய குறிகளை திசைபு
ரியாமல் ....மிருகங்களெது
மனிதரெது என்பதும் புரி
யாது ஏரிக்கரையில் நீர்
குடிக்க வருவதெல்லாம்
பன்றி என நினைந்து
தனது நண்பனையே சுட்ட
வேடன்போல மாறிவிட்ட
னர்.விறகேஇல்லாதநிலை
யில் அடுப்பை எப்படி
மூட்டுவர்.பட்டதடிக்கும்
திறை செலுத்தவேண்டிய
நிலையில்...........................

ா ா ா ா ா ா

அப்பாவின் கடிதம் மகனு
க்கு எரிச்சலைத்தந்தது.
என்ன வெளிநாட்டில
காசை குப்பை மேட்டிலை
யே அள்ளுறம்.......
வயசுபோன நேரத்திலை
இந்தமனிசனுக்குஒண்டும்
விளங்குதில்லை.
எனக்கு இப்ப வயசு
எத்தினை.25. நான்
வீட்டையிருந்துஇஞ்சை
வரேக்கை 19 வயசு.
அதைத்தான் அப்பரு
ம், அம்மாவும் நினைச்
சுக்கொண்டிருக்கினம்.
எனக்கு என்னமாதிரி
வயசு போகுது.அவய
ளுக்கு என்ரை யோசி
னை கொஞ்சம் கூட
இல்லைப்போல.......
அவனது வாய் முணு
முணுத்து ஓய்ந்தது.
தம்பி,..அவனை எப்பிடி
யாவது வெளியே எடுக்
கவேணும்.......
காசு குடுத்தால்த்தான்
எடுக்கலாம்.......
என்ன செய்யவேண்டு
மோ.அதனைஇப்போது
தீர்மானித்தான்.
மக்களுக்கும் மேற்பார்
வையாளருக்கும்
முன்பு காசுக்குப்பொ
றுப்பாயிருந்தவர்கள்
எப்படி கள்ளக்கணக்கு
காட்டினரோ அந்த
யுத்தியினையே இப்
போதும் நான் செய்ய
வேணடும்.
பணம்....இயக்கப்பணம்.
விடுதலைக்குச் சேர்த்
தபணம்.....எண்ணினான்
....தொகையாக எண்
ணினான்.........

ஏ.ஜூலி

www.tamilarangam.net

கிழித்தான.... இயக்கத்து க்காக பணம் பதிவு செய்த கொப்பியை மட்டையே ாடு எரித்தான்......தனது தம்பியின் விடுதலைக் காய் ......தனது சொந்த இரத்தம் என்றதால் எரித்தான்.......என்னும் பலபதி வேடுகளையும் எரித்தான்.

□ □ □ □ □ □

சண்முகத்தார் மகிழ்ந்து போனார்.மகன் சில தின ங்களிலேயே இயக்கத்தை விட்டு வீட்டுக்கு வருவானென்று அவர் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவே இல்லை.

எல்லாம் வெளிநாட்டு மகனுக்குத்தான் வெளிச்சம்.

இதில் யாருக்குத்தான் விடிவு வரும். ......

எங்கும் இருள்.....

எதிலும் கறைப்படிவுகள்.

சண்முகத்தாரின் குடும்பத்தவர் போன்றோரை மக்கள் இனம் காண வேண்டும்......

இப்படிப்பட்டவர்களை மற்றவர்கள் மதிக்கும்வரை நல்ல கருத்துக்கள் புலம்பெயரத்தான் செய்யும்.

□ □ □ □ □ □

## படித்தது கேட்டது

பதினைந்து வருடங்களுக்குமுன்புஒருமாக்ஸியசித்தாந்தசிங்களஏட்டின் ஆசிரியரை ஒரு இளைஞன் சந்தித்தபோது அந்த ஏட்டில்எழுதுகிற விஷயங்களை விளங்குவதுகஸ்டமாகஇருப்பதாகதனதுகருத்தைச் சொன்னான்.அந்தஇளைஞரிடம் "தோழரேஇந்தக்கட்டுரைகள்சிந்திக்கத்தெரிந்தவர்களுக்காகஎழுதப்படுகின்றன" என்று இளக்கரமாக சொன்னார்.இளைஞன் அதைப்பொருட்படுத்தாமல், "சரிதான் தோழரே சிந்திக்கத்தெரிந்தவர்களுக்குஎல்லாமேவிளங்குமே,பிறகு நீங்கள் ஏன் எழுதவேண்டும்?" என்றான். அடுத்த இதழிலிருந்து கட்டுரைகள் எழிமையாக இருந்தன. **- sj-**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீண்டும் மூத்தமகன் புதிதாக கணக்குகளை எழுதிவிட்டு புதியபணப்பதிவேடுகளுடன் வெளிக்கிட்டு விட்டான்.
இனியும் நிறுத்தமுடியாது எனது திருமணம் நடந்தேயாகவேண்டும்............
தாலி,நகை எழுபது எண்பதுபவுணுக்கு குறையக்கூடாது.

மூத்த மகன் புறப்பட்டு விட்டான்.....
பணம்சேர்த்த பதிவேடுகளின் ஒரு பகுதியை எரிப்பதற்காய்........

உண்மையான பலர் களமேட்டில் மரணிக்கப்படுகின்றார்...
பொய்யான சிலர் வெளிநாட்டின் பணச்சேர்ப்பில்.. .....

"...உண்மை என்றால் என்ன?நீங்கள் இன்று வழங்கும் தீர்ப்புதான் எக்காலத்திற்கும் பொருத்தமான எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஏக உண்மையா?அப்படியில்லை. உண்மை சார்பு நிலையானது.ஒவ்வொரு காலகட்டத்திற்கும்,சூழ்நிலைக்கும் ஏற்ப உண்மை புதிது புதிதாக வரும்.ஒரு காலத்தில் பூமி தட்டையாக இருந்ததென்ற கருத்து அக்காலத்தில் உண்மை மாத்திரமே இன்றைய உண்மை பூமி உருண்டை என்பதே. நீங்கள் இன்று வழங்கும் தீர்ப்பு உங்கள் அளவில் மட்டுமே உண்மை.இந்த அடிப்படையில் பிரச்சினையை ஆராய கற்றுக்கொள்ளுங்கள் நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கும் விவகாரம் உங்கள் தன்பபா! விருப்பு,வெறுப்புகளுக்குட்பட்டதாகக் குறுக்கிவிடாதீர்கள். இது அரசியல் விவகாரம்.முழுமக்களின் விவகாரம்.இதில் விரிவான பார்வை அவசியம்.

("புதியதோர் உலகம்" நாவல்)

நாம் இந்த தலைமுறையில் வருந்தவேண்டியிருக்கிறது.
கொடியவர்களினது ஈனச்செயல்களுக்காக மட்டுமல்ல
அதற்கு மேலாக
நல்லவர்களினது பயங்கர
மௌனத்திற்காகவே!

-மார்ட்டின் லூதர்கிங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(50 ம் பக்க தொடர்ச்சி)

போல பெடியள் துரோகிகள் கிடைக்காமல் அலையுறாங்கள். உனக்கு என்ன தெரியும் .....உண்மையைக் கதைக்காதை, பாக்காதை, கேட்காதை. சாப்பிடமட்டும் வாயைத் திறக்கிறதுதான் நல்லது."என்றான் கோபாலன். அந்த மனிதன் இந்தப் பதிலைச் சிறிதும் எதிர் பார்க்கவில்லை."கோபாலா என்னடா சொல்லுறாய்?""எவன் சிவப்புபேசினானோ, அவன் செத்துப்போனான். இப்ப பேசிறவன் சாகப்போறான், எண்டு புதுப்புதுக் கருத்துக்களை கதைக்கிறாங்கள் தாத்தா என்ரை மாமாவுக்கும் இதாலதான் அது நடந்திருக்கவேணும். தாத்தா என்னைப் பொறுத்தவரை மாமா சாகேல்லை உயிரோடைதான் இருக்கிறார். அந்த மனிதன் முதற் தடவையாக தனது பரம்பரையானது உயிருடன் வாடை வெள்ளியின் தாக்கத்தையும், தன்மையையும் கண்டிப்பாக கண்டுகொள்ளும் என்ற நமபிக்கையில் உறுதியானான். கோபாலனைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான்."தாத்தா.............மாதகலாலை இந்தியா போகட்டாம்"

"ஆர் சொன்னது"

"எங்கட சித்தப்பாதான். அவர்தான் எங்கட காம்ப் பொறுப்பாளர்".

"அவனே சொன்னவன் அவனையும் எத்தினைநாள் விட்டுவைப்பாங்களோ?.........?, அவனும் நல்ல பொடியன்தான். நல்லவங்களுக்கு இப்ப காலம் இல்லையே..........."அந்த மனிதன் பெருமூச்சு விட்டான்.

*அந்த மனிதன், பூரணம், கோபாலன் மூவரும் மாதகல் கரை மறையுமட்டு படகிலிருந்து கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.*

முற்றும்

அடுத்த இதழில் சஞ்சீவியின் இரண்டாவது கலந்துரையாடல் பற்றிய தொகுப்பு, சிறப்புக்கட்டுரைகள் என்பன வெளிவரும். அத்துடன் **சிறுகதைப்போட்டி** பற்றிய விபரங்களையும் நீங்கள் காணலாம்

_சஞ்சீவி_



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கள்
எண்ணங்களை
பகிரங்கப்படுத்த என்று
எத்தனை
கவிதைகளைத்தாம் வரைந்திருக்கிறோம்?

அந்த
பசிய நினைவுகள் எல்லாம்
கலைந்து போய்விட்டது.
பழைய கனவுகள்
தொலைந்துபோய் விட்டது.
காலங்கள்
எல்லாம்
கடந்துபோய்விட்டது.
மனிதாபிமானங்கள்
இங்கு
இறந்துபோய்விட்டது.
எங்கள்
இருப்பிடங்கள்
ஏனோ
பிரிந்துபோய்விட்டது.
இப்போது
கைவசம் இருப்பது
இந்த
மௌனம் மட்டுமே.
அதனையும்
கலைத்து விடுமாறு
எதற்காக கட்டாயப்படுத்துகின்றாய்?

இந்த மௌனம்
அந்த
மகத்தான தோல்விகளின்
மறைவிடம்.
அடக்கமுடியாத
அந்தக் கோபங்களின்
புகலிடம்.
சூறாவளிகளையே
சுழற்றி விடத்தக்க வேகங்கள்
முடங்கிக் கிடக்கிறது.
எரிமலைகளையே
விழுங்கி
ஏப்பம் விடத்தக்க தாகங்கள்
அடங்கிக் கிடக்கிறது.

நான் நிஜத்தை தொலைத்து
நீண்டநாட்களாகின்றது.
இப்போது
நினைவுகள் மட்டுமே
நிழலாடிக் கொண்டிருக்கின்றது.

- செல்வன் -





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சத்தியனின்

சிறுகதை.

அதிகாலை, அந்த மனிதனின் வீட்டு பக்கம் இடிந்து மழைநீர் நிரம்பியிருந்தது. ஆடு மாடுகள் தனியாக அலைந்துகொண்டிருந்தன.


அந்த மனிதன், பூரணம், கோபாலன் மூவரும் மாதகல் கரை மறைவிடத்திலிருந்து கண் வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

புதியஇடம் ....எப்படிச் சமாளிப்பது? என்ன உழைப்பு? என்ற வினாக்கள் பூரணத்தின் மனதிலும், அந்த மனிதனின் மனதிலும் மாறி மாறி வந்துகொண்டிருந்தன.

கோபாலன் மட்டும் நிச்சயமாகத் தான் சொந்த மண்ணில் திரும்பவும் கால் வைப்பதாக முடிவெடுத்துவிட்டான்.

O O O

இவர்கள் எங்கே புறப்படுகின்றார்கள் ??????????





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோறு சுடுகுது அம்மா! எனக் கூறி கோப்பையை நிலத்துடன் தேய்த்துக் கோபப்படும் பன்னிரண்டு வயதுக்கோபாலன்தோள்களக்கஆள்உயர ஆயுதத்துடன் முதல்தடவை வீட்டுக்குவந்திருந்தான்.அந்த மனிதனின்செல்லமகன்எப்போதுஇறந்தான்எனத்தெரியாத வினாவுக்குவிடைதேடிவிசாரிக்கச்சென்றபோது....... அவன் கொலையுண்டான் என்ற குற்ற உணர்வு சிறிதும் இன்றி.........

"உன் மகன் துரோகி"!

"அவன் செய்த குற்றமென்ன"?

"அவன் கையில் ஆயுதம் வைத்திருந்தான்".

இன்று பேரன் கோபாலன் ஆயுதத்துடன்!

கிழக்குப்பக்கஜன்னல்வழியாக அந்தமனிதன்கடலை வெறித்துப்பார்த்தபடிமௌனமாகவேஇருந்தான்.அன்றுபௌர்ணமி நாள்.முழு நிலா கடலில் இருந்து வெளியே வரும்வரை பார்த்துக் கொண்டிருந்தான்.நிலவு கடலை விட்டு வெளியே வந்தமையால் கடலலைகள் சற்று வேகமான அலைகளுடன் கூடியே கரையில் அடிப்பதும்,திரும்பக் கடலில்போய் புதிய அலைகளுடன் சேர்ந்து கரைவந்துசேர்வதுமாகஇருந்தன.

சற்றுத்தொலைவில் மீன்கள் துள்ளவது அந்த மனிதனின்கண்களுக்குத்தென்பட்டது.பௌர்ணமி காலம் ஆனதால் வழமையைவிட கடல் இன்று வெள்ளமாக இருந்தது.மீன்கள் துள்ளுவதும்,துள்ளும் மீன்களைப் பிடிக்க வட்டமிடும் பெருமீன்களின் அசைவுகளையும் அந்த மனிதன்கண்டுகொண்டான். சிறுமீன்கள் அங்கு எதிரிக்கு எதிராக ஒன்றுசேர்ந்து போராடாமல் தாம் தப்பவே முயற்சித்துக்கொண்டிருந்தன.............



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டம் என்பதை அங்கு காணவில்லை!.அந்த மனிதன் தூரத்துப்பார்வையைக் கரைகளுக்கு நகர்த்தினான்..அங்கு மணல் நண்டுகள் தமது பொந்துகளில் இருந்து வெளியே வந்து கொண்டிருந்தன.

கடல் வெள்ளம் அதிகரித்திருந்தமையினால் மணல் நண்டுகள் பொந்தில் எப்படி இருக்கமுடியும்? மணலில் தோண்டப்பட்ட பொந்துகளில் நீர் நிரம்பியதால் மணல் நண்டுகள் அவையின் நுரையோரங்களில் இரு கண்களையும் உயர்த்தியபடி அவை கரையுடன் மோதவும் திரும்பி கடலினுள் சேரவும் அதற்குத்தகுந்தாற்போல் நடனமாடின.

இந்த நிகழ்வுகளை அந்த மனிதன் 60வருடமாக பார்த்தபடிதான் இருக்கிறான்..ஆனால் இன்று மட்டும் இந்த அசைவுகள் அந்த மனிதனுக்கு ஒரு உண்மையை உணர்த்தியது.

கண்களை மூடிக்கொண்டான்.உடல் வியர்த்திருந்தது.உண்மைகளை புறச்சூழல் இன்று மிகத்தெளிவாகவே உணர்த்தி இருந்தது.மூத்தமகளின் கணவன் இந்திய இராணுவத்தை எதிர்த்து வீழ்த்தப்பட்ட போது அவன் தேசிய எழுச்சி என்று பொறுத்துக் கொண்டான்.மருமகனின் இழப்பு பாரியது..ஆனால் இன்றைய அதிகாரிகள் அன்று இளப்பின் வேதனைகளைப் பகிர்ந்து கொள்ள வரவில்லை.தமது போராளி என்று விருது வழங்கிப் பாராட்டினர்.

நினைவுகள் அவனை உள்ளூர வாட்டியது.கண்களை திறந்து கொண்ட அந்த மனிதன் சாய்வு நாற்காலியைவிட்டு எழுந்து கொண்டான்.வேட்டித்தொங்கலை ஒரு கையினில் பிடித்தபடி கடற்கரை வாசற் பக்கம் வந்த அந்த மனிதனை பூரணம் இடைமறித்து

........

"எங்கை போறாய் ?"
"பிள்ளை காலாற கடற்கரைக்கு....."
"அது ஜன்னல வழியா தெரியுதுதானே?வீட்டுக்குள்ளயிருந்து பாக்கலாம் " வீட்டில் விளக்கு இல்லை .தம்பியின்ர இழவுக்கு இந்த ஊர் வரவேயில்லை.......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பிள்ளை நான் வெளியிலை கொஞ்சம் போயிட்டு வாறன்.நாங்கள் இதுவரைக்கும் ஒருவருக்கும் கெடுதல் செய்ய இல்லை.இதுகள்.... இந்தச்சனங்கள்......"

நாலுமுழ வேட்டியுடன், கடற்கரையில் கால்பட சற்று ஜில் என இருந்தது..ஆனால் உள்ளம் கொதித்துக்கொண்டுதானிருந்தது.மணற்பரப்புக்கு வந்த அந்த மனிதன் தன் கால்களை மண்ணில் புதைத்துக்கொண்டான்.

....இந்த மண்ணில்தானே அவனை அரையளவு கிடங்கு கிண்டித்தாட்டனான்.இந்த உப்புமண் எதை எலலாம் தீர்த்துவைத்தது.....

அந்த மனிதன் மல்லாக்க மணற்பரபபில் சார்ந்துகொண்டான்.வானத்தில் வெள்ளிகள் நிறையவே காணப்பட்டது..ஆனால் வெள்ளிகளில் எனறும் இல்லாத பிரகாசத்தை இன்று கண்டு கொண்டான்.உண்மைகளுக்காக அங்கொன்று இங்கொன்றாக வெள்ளிகள் பிரகாசிப்பதால் நிலவுக்கு இன்றுமட்டும் ஆட்சி கிடைக்கின்றது.நிலவு நிலையற்றது..அதில் தினம் தினம் மாறறம் உண்டு.அந்த மாற்றம் புறச்சூழலில் மாற்றங்களை உண்டு பண்ணியது என்பது மறுக்கமுடியாது..ஆனால்....அந்த மனிதன் நம்புவது வாடை வெள்ளியைத்தான். அவன் இயல்பாகவே வாடைவெள்ளியின் துல்லிய ஒளியை ஒருகணம் நினைத்தவனாக .......

வாடைவெள்ளி!இதுவே சர்வதேசக் கடலோடிகளின் உயிர் நாடி.இதனை அடிப்படையாகக்கொண்டுதான் அந்த மனிதனும் இயற்கையை எதிர் கொண்டான்.கடல்அலையைகாத்திருந்துமுகம்கொடுத்தான் தன் குடும்பத்தைக் காக்க கடலளவு ஆசைகளை கடலின் மனம் கொண்டு காத்து நின்றான்.இயற்கையுடன் போராடினான்........

இப்படிக்கட்டிக்காத்து அவன் வளர்த்தகுடும்பம் இன்று செல்விழுந்த பனைமரமாய் ....கண்ணி வெடி கண்ட நடைபாதையாய்......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அன்று மனைவி பங்கறில் பாம்பு கடித்து இறந்த போது விடிவுக்காக மக்கள் இழப்புக்களைத்தாங்கிக் கொள்ளவேண்டும் என்று தன்னைச்சமாதானப்படுத்திக்கொண்டான்.

மருமகனை "இந்தியப்புயலில்" தொலைத்தபோது ....தேசிய எழுச்சியில் இந்தஇழப்பும்ஏற்கத்தானே வேண்டும் என்று பொறுத்துக்கொண்டான்.

அவன் மகன் இயக்கம் மறுக்கப்பட்டஇயக்கத்தில் இருந்தமையால் சொந்த ஊருக்கு வர அனுமதி மறுக்கப்பட்டு, பிறகு "காணாமலே " போய்விட்டான். இப்போது மகன் எங்கே......?எங்கே....?

பெரிய கிடங்கொன்றில பல பிணங்களுடன் ஒன்றாகத்தாக்கப்பட்டானா?

ரயர்கள் போட்டு பல பிணங்களுடன் ஒன்றாக கொளுத்தப்பட்டானா?

கைகளையும் கால்களையும்கடற்கரைமணலில் ஒருதரம் அமிழ்த்தியபடி நீண்டநேரம் அசைவின்றி மல்லாக்காக் கிடந்த அந்த மனிதனின் கண்கள் இரு புறமும் கண்ணீர் வழிந்தோடி காதுமடல்களைநிரப்பி மணலில் சொட்டுப்போட்டுக்கொண்டது.

அந்தமனிதன் திடீரென எழுந்து வாடைவெள்ளியை மட்டும் முறைத்துப்பார்த்துக் கொண்டான். எத்தனை தடவை தான் கரை தெரியாது கடலில் தவித்தபோது துணைநின்ற விடிவெள்ளி.இதை ஒதுக்கிவிட்டு புதிர்ப்பாதையில் போபவர்கள் கரைசேர்வார்களா?அவன் ஆளுயர ஆயுதம் ஒன்றைத் தோள்கனக்கக் காவி வந்த தனது பேரனை ஒரு தரம் நினைத்துக்கொண்டான்.

"சோறு சுடுகுது அம்மா......"எனக்கோபம்கொள்ளும் கோபாலன் ஆளுயர ஆயுதம் வைத்திருக்கிறான் இவன் எப்போது துரோகி ஆகப்போகிறான்.?

அப்போது பேரனைப்பற்றி தகவல் அறியமுடியுமா? அந்தமனிதன் கலங்கினான்.உன்பேரனும் ஆளுயரத் துப்பாக்கி வைத்திருந்தான் என்பதால் அவனும் துரோகியே என்று பட்டம்சூட்ட எத்தனைநாட்செல்லும்.?

www.tamilarangam.net

இந்த மனிதன் சாதியத்தால் பெரிதாகபாதிக்கப்பட்ட வரல்ல..ஆனால் ஒரு மனிதன் இன்னொருமனிதனை மனிதனாக அங்கீகரிக்கவேண்டுமென்பதற்காக 60களில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் தீவிரபங்கு எடுத்துக்கொணடவர்.

அந்தமனிதன் தலைகனக்க கடகத்தில் சோறு சுமந் தவன்.தன் செல்லமகன் கொலைசெய்யப்பட்டபின் துரோகி என்ற வதந்தியில் ஊரவரை சிக்கவைத்து அந்த ஊரின்வாயால் அந்தமனிதனின் காதுகளுக்கு இழவுச் சேதி வருவது எத்தகைய பாரியவேதனை... எத்தகைய பாரிய குள்ளநரித்தனம்....இதுஎத்தகைய துரோகத்தனம். ......வஞ்சகத்தனம்.....

எத்தனை போராளிகள் தம் உயிர்களைஎத்தனை யோ நம்பிக்கையில் அர்ப்பணித்தனர்.அவர்களின் அர்ப்பணிப்பு தமிழ் மக்களின் விடுதலைக்காகவா? பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு எதிரானதா?? அல்லது சைவத்தமிழ்த்தேசியத்தலைமைக்காகவா??

அந்த மனிதனின் வாழ்க்கையின் அனுபவமானது இன்று பல இழப்புகளினூடு தொகுக்கப்படுகின்றது. கச்சான் காற்று அடிப்பதற்கு வடமேற்கு மூலையில் மேகங்கள் கருக்கட்டுகின்றன.

"அப்பு கச்சான் காத்து அடிக்கப்போகுது.வாவன்"

"ஓம் பிள்ளை வாறன் "

அந்தமனிதன் இப்போது எழுந்து நடக்கிறான்.அவன் மனம் இயக்கங்களைப்பற்றியேஇப்போதுஎண்ணவில்லை. தன்னுடைய மகனுக்கு நடந்ததுபோல் எத்தனை உண் மையான அரசியல்வேலை செய்தவர்கள் அக்கிராமத் தைவிட்டு விரட்டப்பட்டனர்.....உண்மையாக உழைத்த எத்தனை போராளிகள் கொல்லப்பட்டனர்.....

துரோகிகள் பட்டியல் என்று,அன்று காட்டியபோது தலையாட்டிய இந்நச்சனங்கள் இப்போது மாங்குளம் தாக்குதலின்பின் காட்டப்பட்ட பட்டியலை மட்டும் ஏன் தயக்கத்துடன் ஏற்றார்கள்..?

தன் மகன் ஆயுதம் வைத்திருந்தான்,அதனால்தா ன்அவன் அழிக்கப்பட்டான் எனச்சொல்லும் அளவுக்கு

எரிநட்சத்திரம்

www.tamilarangam.net

இவர்களது வரையறைகள் நாறிக்கொண்டிருக்கின்றன. ஆனால் கொல்லப்பட்டவனின் உணர்வுகள்...எண்ணங்கள்.....சொன்னால்கூட இவர்களுக்கு விளங்கிக்கொள்ளும் பக்குவம் இருக்குமா?இல்லை!..இல்லை!!
"என்னணை அப்பு உனக்கு "எனப்பூரணம் பதறியபடி கேட்டாள். "இல்லைப்பிள்ளை.எனக்கு யோசினை கூடிப்போச்சு ..."எனக்கூறியபடி வீட்டுக்குள்நுழைந்தான்.

தமிழ்மக்களின் ஜனநாயகம் பறிக்கப்படுகிறது என ஜனநாயகம் தேடி ,அவன்மகன்புறப்பட்டான்என்பதனையும்,இக்கட்டான காலத்தில் தனது மக்களுக்காகவே மரணித்தான் என்பதனையும் அந்த மனிதன் நினைவு கூருவதை யார்தான் தடைசெய்யமுடியும்.செங்கதிர்கள் இன்று தலையெடுக்க விடாமல்கிள்ளிஎறியப்படுகின்றன. இது புதிய சைவத் தமிழ் தேசிய முதலாளித்துவ த்தின் தலை எடு போர்!....யோசனையுடனே.அந்த மனிதன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.வடமேற்கு மூலையில் மப்புக்கூடிய மேகம் மிகவும் வேகமாக கிழக்குப்பக்கமாக வந்து சந்திரனையும் மறைத்து பலமான கச்சான் காற்றுடன் கூடிய மழையும், இடியும் ,மின்னல்களுமாயின.நடுச்சாமத்திற்கும் கொஞ்சம் முன்னதாகவே மழை சற்று இளகியது.

நாலுபேர் வீட்டுக்கு வந்தனர்."யார் பூரணம் இங்கே" "நான்தான் தம்பிமாரே"எனறாள் பூரணம்.

"அது அக்கா உங்கட மகன் பங்கர் வெட்டேக்கை விழுந்து காலிலை காயம்....அதுதான்...."

"ஐயோ தம்பிமாரே.. என்ர புரிசனும் உங்களுக்காய் தானே ....இந்தியன்இழவுவிழுவான்....என்ரைசெல்லத்துக்கும் ஏதுமெண்டால் என்னாலை எப்பிடி தம்பிமாரே..."

"அதுதான் உங்கட அவருக்காகத்தான் ......என்று ஒருவன் சொல்லிக்கொண்டிருக்கும்போது மற்றவன் அவன் காலில் மிதித்துத் தடுத்துவிட்டு "இல்லை அக்கா வீட்டிலை வைத்துப் பார்ப்பதுதான் நல்லதென உங்கட அவற்றை மச்சான் சொல்லி,கொண்டு வந்தனாங்கள். "ஐயோ தம்பிமாரே...."என்று கத்தியபடி ஓடிப்போய் ஜீப்பில் கொண்டு வரப்பட்ட கோபாலனைத்தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் வந்தாள்.முதல்நாள் அவன் ஆயுதத்து

www.tamilarangam.net

டன் வீட்டுக்குச் சாப்பிட வந்தபோது, தான் நடந்துகொண்ட முறையினால்தான் அவனுக்கு இப்படி நேர்ந்ததோ என அவள் தன்னையே நொந்து கொண்டாள்.

கொண்டுவந்த நால்வரும் போனபின் கோபாலன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுப் பேசினான்."அம்மா நீ சொன்னது சரிதான்".

"என்னடா நடந்தது"?

சாய்வு நாற்காலியில் சிறிது அசைவுதென்பட்டது.அந்த மனிதன் தூங்கவில்லை."இப்ப கொஞ்ச நாளாய் என்னைப்பாக்கிறவங்கள் சரியாய் மாமன்மாதிரித்தான்என்ரை சிரிப்பு,நடை, பதில் சொல்லுறது,இருக்கெண்கிறாங்கள். முந்த நாளும் ஒருத்தன் இப்பிடிச்சொல்ல, "அதுதான் எல்லாம் முடிஞ்சுதே" எண்டு பதில்சொல்லிப்போட்டேன்.அவன் திடுக்கிட்டு எங்கட காம்புக்குப் பொறுப்பான சித்தப்பாவைக் கூப்பிட்டு ஏதோ சொன்னான். அதற்குப்பிறகு காம்பில் எல்லோரும் என்னோடு கதைப்பது குறைந்துவிட்டது.நேற்று பங்கர் வெட்ட எண்டு ஓடித்திரிந்தார்கள்.புத்தகம் படித்துக்கொண்டிருந்த என்னைக் கூப்பிட்டு வெட்டச் சொன்னாங்கள்.வெட்டப்போனேன்.திடீரெண்டு யாரோ இருட்டுக்கை இருந்து பிக்கானாலை எறிஞ்சாங்கள்.நல்லகாலம் அது காலிலைவிழுந்து நல்லா வெட்டிப்போட்டுது.தலையிலை விழுந்திருந்தால் நான் முடிஞ்சன்.தியாகிகள் பட்டியல்தான்....."

"என்னடா சொல்லுறாய் ....?என்றபடி அந்தமனிதன் சாய்வுநாற்காலியைவிட்டுஎழுந்துகொண்டான்.அவனின் மனதிலிருந்த கேள்விகள் எல்லாம் முதற்தடவையாக வெளியே வந்தன."இதுவரைக்கும் நாங்கள் பட்ட கஷ்டங்கள் ஒரு விடிவுக்கு எண்டுதான் இருந்தோம்.இப்ப வீட்டிலை விளக்கு கொளுத்திக் கதைச்சால் ஒரு பத்துப்பாசல் சாப்பாடு தேவை யெண்டு ஆணை வருகுது.ஆகாயத்திலை இருந்து அரிசி யோ டேல்ல, குண்டுதான் போடுது எண்டு சொன்னா கேக்கவா போறாங்கள்?

வெளியிலை எல்லாம்முடிஞ்சு இப்ப,கூட இருக்கிறபோராளியளைக் களையெடுக்கிற அளவுக்கு தன்னம்பிக்கை யீனம்.இந்த உள் இயக்க கொலையள் இப்ப வெளியிலை வருகுது....." "தாத்தா நீ கதைக்காதை. இப்ப என்னைப்

(தொடர்ச்சி 41 ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சஞ்சீவி

## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 19 u$ |
| Canada<br>Australia | 23 u$ |
| Sweden<br>Norway | 14 u$ |
| Danmark | 95kr. |

காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்.

**A/C.NO.7601-408695-3**
**Tamilsk Dansk Venskabs Forening**
**Vestjysk Bank**
**7500-Holstebro,**
**Danmark.**

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

**CHANCHIVE**
**POSTBOX-1205,**
**7500-HOLSTEBRO,**
**DANMARK.**

"மறுக்கப்பட்ட பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Chanchive
Postbox 1205
7500 Holsterbro
Denmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்